விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

* வீரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN

T.P 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

COM NET

46, ஆடியபாதம் வீதி, (ப.தோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 29 | ஞாயிற்றுக்கிழமை | (14.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 331

விடுதலை பெற அவாவுறும் மக்களுக்கு அரபாத்தின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது

அனுதாபச் செய்தியில் தலைவர் பிரபா



(கொழும்பு)

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்தின் மறைவுக்கு தமீழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளார். யசீர் அரபாத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. அந்த அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யசீர் அர்பாத் பலஸ்தீன் மக்களால் மட்டுமல்லாமல் முழு உலகம் போற்றும் தலைவராக திகழ்ந்துள்ளார் பலஸ்தீன மக்களின் உயர் மரியாதைக்குரிய தேசியக் குறீயீடான யசீர் அரபாத்தின் மறைவுக்கு தமிழ் மக்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

சுருக்கிட்டு தொங்கிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு!

மானிப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் சுருக்கிட்டு தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று மானிப்பாய் தனகசபை வீதிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜெக தீஸ்வரன் (வயது16) என்ற இளைஞனே சடலமாக மீட்கப் பட்டவராவார்.

சம்பவம் பற்றிய தகவலை அடுத்து அவ்விடத்துக்குச் சென்ற மானிப்பாய் பொலிஸ் சாஜன் எஸ்.எம்.குணதிலக தலைமையி லான பொலிஸ் குழுவினர் சட லத்தை மீட்டு பிரேத பரிசோத னைக்காக யாழ். போதனா வைத் தியசாலையில் நேற்றுப் பிற்பகல் ஒப்படைத்தனர்.

(இ)

சமாதான முயற்சி செய்தியுடன் விசேட தூதுவர் எரிக்சோல்

புதுடில்லிக்கு விரைந்தார்!

இலங்கைச் சந்திப்புக்கள் குறித்து இந்திய தலைவர்களுக்கு விளக்குவார்

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் நேற்றுப் பிற்பகல் இந்தியா சென்றார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமை குறித்து இந்தியத் தலைவர்களுக்கு எடுத்து விளக்கவே அவர் புதுடில்லிக்கு விரைந்துள்ளதாக தெரியவரு கிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

சூட்டுக் காயத்துடன் இளைஞனின் சடலம்

உரிமை கோருகிறது எல்வாளன் படை

மன்னாரில் சம்பவம்

(மன்னார்)

மன்னார் நகரில் அடையாளம் தெரியாத ஆயுதபாணிகளால் இளைஞர் ஒருவர் நேற்று முன் தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட் டுள்ளார்.

கொல்லப்பட்டவர் நொச்சி குளத்தைச் சேர்ந்த ரி. ஜெப நேசன் (வயது - 28) என அடை யாளம் காணப்பட்டுள்ளார்.

மன்னார் உதவி அரச அதிபர் அலுவலகத்துக்கு அருகில் இவ ரின் சடலம் நேற்றுக்காலை கண் டெடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வியாபாரிக ளுக்கு இதுதான் தண்டனை என்று எச்சரிக்கை விடுக்கும் வாசகம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

கட்டுநாயக்காவில் இருமணி நேரம் பாலசிங்கம் - சொல்ஹெய்ம் பேச்சு

சந்திப்பை அடுத்து பாலா லண்டன் புறப்பட்டார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்முடன் நேற்று நீண்டநேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து உலங்கு வானூர்தியில் புறப்பட்ட பாலசிங்கம் தம்பதியினர் கட்டுநாயக்கா விமான நிலையத்தைச் சென்றடைந்தனர்.

இதேநேரம் விமான நிலையத்திற்குச சென்ற எரிக்சோல்ஹெய்ம் அன்ரன் பாலசிங்கத்துடன் சுமார் இருமணி நேரம் பேச்சு நடத்தினார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக விடுதலைப புலிகள் முன்வைத்த புதிய யோசனைக்கு ஜனாதிபதி யினதும் அரசாங்கத்தினதும் நிலைப்பாடுகள் என்ன என்பது குறித்து எரிக்சோல்ஹெய்ம் பாலசிங்கத்துக்கு விளக்கிக் கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் முன்வைத்த புதிய யோசனைக்கு ஜனாதி பதியின் துலங்கல் எப்படிப்பட்டதாக இருந்தது என்பது குறித்தோ? விடுதலைப் புலிகள் முன்வைத்த யோசனை என்ன என்பது குறித்தோ நோர்வேத் தரப்பினர் இதுவரை தகவல் எதனையும் கசிய விட வில்லை.

விமான நிலையத்தில் தனி அறையொன்றில் நடைபெற்ற பேச்சுக்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து பி.ப. 1.45 மணியளவில் பாலசிங்கம் தம்பதியினர் விமானத்தில் லண்டன் புறப்பட்டனர்.

(த-8)

உள்ளே...

ஜெயேந்திர சுவாமியின் சிறப்புக் கட்டுரை.

நடுவு நிலை தவறா நன்னெறி தாக்கும் உங்கள் நாவிதம்

இன்று ஒரு தகவல்

கணனி கண்டுபிடிக்கும்

எனக்குத் தெரிந்த ஒரு எழுத்தாளர் ஒருவர் ஒருநாள் என்னிடம் வந்து காதோடு காதாக "சார்.. இனிமேல் நான் புத்தகம் எழுதுவதை விட்டு விடலாம் என்று நினைகிறேன்" என்றார். அவர் அப்படி முடிவு செய்தது மிக நல்லது தான். இருந்தாலும் அதை அவரிடம் காட்டிக் கொள்ளாமல் "ஏன வீட்டில் யாரும் வேண்டாம் என்று கூறினார்களா?" என்று யதார்த்தமாகக் கேட்டேன்."அதெல்லாம் ஒன்றுமில்லை! இப்போதெல்லாம் எழுத்தாளர்கள் பழைய புத்தகங்களிலிருந்து திருடி எழுதினால் அதைக் கணனி கண்டுபிடித்து விடுகிறதாம். நமக்கு ஏன் சார் வம்பு? அது தான் இந்தத் தொழிலையே விட்டு விடலாம் என்று நினைக்கிறேன்" என்றார்.

இவர் இப்படிப் பயப்படுவதில் அர்த்தம் உள்ளது. ஒருவரது படைப்பை இன்னொருவர் திருடி எழுதி வெளியிடுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள் அதைக் கணனி மூலமாகக் கண்டுபிடித்து விடலாம். ஒவ்வொருவரும் எழுதும் முறை வித்தியாசப்படும். சொற்களைப் பயன்படுத்தும் விதம், குறிப்பிட்ட சில சொற்களைப் பலமுறை பயன்படுத்துவது, எழுத்தாளருடைய நடை இவற்றையெல்லாம் கணனி துல்லியமாக ஆராய்ந்து எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடித்து விடும்.

"சைலன்ட் டான்" (**Silent Dawn**) என்று ஒரு சோவியத இலக்கியங்களில் தலை சிறந்த நாவல். ஆனால் இதை எழுதியவர் யார் என்பதைப் பற்றி ஒரு சமயத்தில் பெரிய சர்ச்சை எழுந்தது. 1920 ஆம் ஆண்டு ' பாய்தா குறையுகோ' என்பவரின் படைப்பைத் திருடி 'மிகேயில் ஷைலோகோப்' எழுதினார் எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

இந்தக் குற்றச்சாட்டு உண்மையா? பொய்யா? எப்படிக் கண்டுபிடிப்பது? இதைக் கணனியின் மூலம் கண்டுபிடிக்க முயற்சித்தார் நோர்வே நாட்டின் பேராசிரியர் ஒருவர். அவர் என்ன செய்தார் தெரியுமா? அந்த இரண்டு எழுத்தாளர்களுடைய வெவ்வேறு படைப்புக்களிலிருந்து ஆயிரம், ஆயிரம் வரிகளை எடுத்துக் கொண்டார். சர்ச்சைக்குரிய இந்த நாவலில் இருந்து ஆயிரம் வரிகளை எடுத்தார்.

இவை மூன்றையும கணனியில் கொடுத்தார். நடைசொற்களைக கையாண்டிருக்கும் பாங்கு, சொற்களின் பொருள் போன்ற எட்டு அளவு கோல்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு பகுத்து ஆராய்ந்து பார்த்தார். அதன்பின் ஷைலோகோப தான் இதை எழுதினார். இதை அவர் திருடி எழுதவில்லை என்பதை நிரூபித்துக் காட்டினார்.

இதேபோல் இன்னொரு சம்பவம் 1985 ஆம் ஆண்டு ஒரு பழைய பாடல் கிடைத்தது. அதை எழுதியவர் யார் என்று தெரியவில்லை. பலபேருடைய பாடல்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தார்கள். அறிமுகப்படுத்தும் வார்த்தைகள், கையாளப்படும் முறை போன்ற புள்ளிவிபரங்களின் அடிப்படையில் ஆராயந்து பார்த்து விட்டு இந்தப்பாடலை எழுதியவர் ஷேக்ஸ்பியராக இருக்கலாம் எனக் கண்டுபிடித்தனர்.

எர்னஷ்ட் ஹெமிங் வேயின் 'கடலும் கிழவனும்' ஒரு புகழ் பெற்ற நாவல். இது 1952 இல் வெளிவந்தது. ஆனால 1940 இற்குப் பின்பு அவர் குறிப்பிடத்தக்க அளவு எதையும் எழுதவில்லை. 1952 இல் வெளிந்த இந்த நாவலுக்கு "புலிடசர்" பரிசு கிடைத்தது. 1954 இல்ஹெமிங்வே நோபல பாவு பெற்றார். ஆனால்.. ஒரு இலக்கிய அறிஞர் ஹெமிங்வே இதை 1936 இல் தான் எழுதியிருக்க வேண்டுமென யூகித்தர்.

உடனே அவரும் அவரது மாணவர் ஒருவரும் சேர்ந்து கொண்டு இதைக் கண்டுபிடிக்க முயற்சித்தனர். கடலும் கிழவனும் என்ற நூலில் இருந்து 4500 வார்த்தைகள் 1933 முதல் 1951 வரை அவர் எழுதிய வேறு 4 நாவல்களிலிருந்து 4000 வார்த்தைகளை எடுத்தனர். கணனி மூலம் ஆராய்ந்து பார்த்த போது ' கடலும் கிழவனும்' நாவல் பினபு எழுதப்பட்ட நாவல்களை விட 1936 இல் எழுதப்பட்ட உலகின் தலைநகர் என்ற நாவலை ஒத்திருப்பது தெரியவந்தது. அதனால் இது 1936 இல் எழுதப்பட்டது என்பது உறுதியானது.

கம்பராமாயணத்தில் கூட சில பாடல்கள் கம்பரால் எழுதப்படவில்லை என்று சொல்வார்கள் அல்லவா? அவற்றைக் கண்டுபிடிப்பதற்கும் கணனி உதவும போல் தெரிகிறது. இப்படி இருக்கும் போது அந்த நண்பர் அப்படிப் பயந்தது சரிதானே!

ஒருவர் ஒரு சிறுகதையை எழுதி எடுத்துக் கொண்டு பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்குச் சென்றார். ஆசிரியரிடம் சென்று "சார் ஒரு அற்புதமான சிறுகதை எழுதிக் கொண்டு வந்திருக்கறேன் பார்க்கிர்களா?" என்றார். ' என்னதலைப்பு? ' என்றார் அவர். "வாழ்வு மலர்ந்தது என்று தலைப்பு கொடுத் திருக்கிறேன்" என்றார் இவர். அவர் அதை வாங்கிப் பார்த்து விட்டு "வாழ்வு மலர்ந்தது என்பதற்குப் பதில் மலர்ந்த வாழ்வு என்று வைத்து இருக்கலாமே" என்றார். " இரண்டும் ஒன்று தானே சார்" என்றார் இவர். " அதுஇல்லை.. கதைதான் விக்கு வரிமாறாமல் அப்படியே இருக்கிறது. தலைப்பையாவது மாற்றலாமே" என்று பார்த்தேன என்றார் ஆசிரியர். "என்ன சொல்கிறீர்கள்?" என்றார் இவர் ஒன்றும் புரியமல். "15 வருடங்களுக்கு முன்பு நான் எழுதிய கதை சார் இது" என்றார் அந்த ஆசிரியர்.

தென்கச்சீ கோ. சுவாமீநாதன்

சர்வதேச யுத்த விதிமுறைக்கு மாறாகவே தமிழ் இனத்தின் மீது யுத்தம் திணிக்கப்பட்டது

-சிவநேசன் எம்.பி.

(திருநெல்வேலி)

சர்வதேச யுத்த விதிமுறைகளிற்கு மாறாக சிங்களப் படையினர் தமிழ் மக்கள் மீது தமது யுத்தத்தை திணித்ததன் மூலம், தமிழ் இனத்தை விடுதலைக்கான பாதையில் விரைவாக நடை பயில வைத்துள்ளதுடன், தமது கோர முகத்தையும் சர்வதேசத்தின் முன் வெளிப்படையாகக் காட்டியுள்ளனர்.

இவ்வாறு மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் குறிப்பிட்டார்.

அவர்அங்கு மேலும் குறிப்பிடுகையில், ஆனையிறவை மீட்பதற்காக விடுதலைப்புலிகள் படை நிலைகளைத் தகர்த்தெறிந்து வீரகாவியம் படைத்துக் கொண்டு இருந்த போது விடுதலைப் புலிகளின் தாக்குதல்களிற்கு ஈடு கொடுக்க முடியாத படையினர் மருதங்கேணி, மாமுனை, ஆனையிறவு, பளை, ஆகிய பகுதிகளை விட்டு பின் வாங்கினர்.

இதன் போது சர்வதேச யுத்த விதிமுறைகளுக்கு மாறாக பொது மக்களின் குடியிருப்புக்கள் ,பாடசாலைகள், ஆலயங்கள், வைத்தியசாலைகள் என்பவற்றையே இலக்கு வைத்துத் தாக்கி அழித்தனர். இவ்வாறு தான் இந்த வைத்தியசாலையும் படையினரால் அழிக்கப்பட்டது. சர்வதேச யுத்த விதிமுறைகளுக்கு மாறாக எதிரிகள் எமது மண்ணில் தாக்குதல் நடாத்தியதால் விடுதலைப் போராட்டத்தை நடத்தி வரும் தமிழ் இனம் தனது விடுதலைக்கான பாதையில் மேலும் உற்சாகத்துடன் நடை பயின்றது.

எதிரி தமிழ் இனத்தை எவ்வளவு தூரம் ஒடுக்கலாம் என்று கனவு கண்டானோ அவை எல்லாம் தவிடு போடியாகின. தமிழினம் இன்று விடுதலையின் விளிம்பில் நிற்கிறது என்றார்.

இந்நிகழ்வில் கடற்புலிகளின் மக்கள் தொடர்பாளர் மறவன் மாஸ்ரர், கடற்புலிகளின் வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் தீபன், திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் செல்வி ஈழவாணி, மருதங்கேணி உதவி அரச அதிபர் ரி.ஜெயசீலன்,மாவட்ட கடற்றொழில் அதிகாரி வடமராட்சி புனரமைப்பு நிறுவனத்தினர், முன்னாள் உதவி அரச அதிபர் பி.வேலாயுதபிள்ளை,பருத்தித்துறை பிரதேச சபை செயலர் பகுதி,மருதங்கேணி பிரப்பு இறப்பு விவாகப் பதிவாளர் தவச்செல்வம்,மருதங்கேணி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கா. ஜீவரட்னம், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் தெய்வேந்திரம், நிக்கொட் நிறுவனப் பிரதிநிதிகள், மருதங்கேணி வைத்திய அதிகாரி ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ற-43)

இடைக்கால நிர்வாக சபை பரிசீலிக்கப்பட்டால் அரசிலிருந்து உடனடியாக வெளியேறுவோம்

ஜே.வி.பி. அரசுக்கு எச்சரிக்கை

விடுதலைப்புலிகளினால்முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக யோசனை அடிப்படையில சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுமானால், அரசாங்கத்திலிருந்து தமது கட்சி உடனடியாக வெளியேற நோடும் என ஜே.வி.பி. அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இநத எச்சாக்கையை ஜேவிபி. ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாக அரசாங்கத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.சமாதானப் பேச்சுவாத்தையை ஆரம்பிப்பது என்றால் விடுதலைப் புலிகளினால் முன் வைக்கப்பட்டுள்ள இந்த யோசனை ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது. அப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டால் அமைச்சுப் பதவிகளைத் துறந்து எதிர்க்கட்சி வரிசையில் அமர நோடும் என ஜேவிபியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாக அந்தத் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை ஜே.வி.பி.யின இந்த எதிர்ப்புக் காரணமாக உத்தேச இடைக்கால நிர்வாக யோசனை என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காமல் வேறு பெயர் பிரயோகம் ஒன்றைப் பயன்படுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது .

இதுபற்றி நோர்வே ஊடாக விடுதலைப் புலிகளுக்கு இறுதியாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் விடுதலைப் புலிகள் தரப்பு அதனை நிராகாத்து விட்டதாக மற்றுமோர் தகவல் கூறுகின்றது. (ற)

இராசி பலன்

14.11.2004 (ஐப்பசி 29, ஞாயிற்றுக்கிழமை)
துதியை பிற்பகல் 4.45 மணிவரை
அனுசம் காலை 7.14 மணிவரை
கேட்டை பி.இ 5.45 மணிவரை
இராகுகாலம்- 4.37- 6.07 மணிவரை
சுபநேரம்-9.07-10.37 மணிவரை
நம்மான் பண்டிகை
ஸ்கந்த சஷ்டி விரதம்-2ம் நாள்

மேடம் — வீண் தொல்லை, அமைதிக் குறைவு, எடுத்த காரியம்தாமதமாகும், பணக் குறைவு.

இடபம் — தெய்வ நம்பிக்கை, காரிய அனுகூலம், திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு.

மிதுனம் — சத்துரு ஜெயம், பண வருவாய், முயற்சி கைகூடும், தொழில் சிந்தை.

கடகம் — காரிய இடையூறு, மனஸ் தாபம், உடல் நலக்குறைவு, பணத்தட்டுப்பாடு.

சிங்கம் — பயந்த சுபாவம், கல்வியில் அர்வம், தன்னம்பிக்கை குறைவு, அற்பர் உறவு.

கன்னி — கூட்டு முயற்சி, நல்லசெய்தி, இனிய அனுபவம், வாக்கு மேன்மை.

துலாம் — மாதர் நட்பு, பொருள் விரயம், வீண் மனஸ்தாபம், காரிய தாமதம்.

விருச்சிகம் — நல்லமுயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், ஜன வசியம்,

தனுசு — பாதாவழி உறவு, சயன சுகக் குறைவு, முயற்சி தாமதம், வீண் அலைச்சல்.

மகரம் — தெய்வதரிசனம், மன மகிழ்ச்சி, காரிய சித்தி, கீர்த்தி.

கும்பம் — சுப நிகழ்வு, உற்சாகம், தொழில் சிந்தை, சகோதரர் உதவி.

மீனம் — ஆன்றோர் மதிப்பு, வயிற்று வலி, அச்சமான நிலை, உடல் உழைப்பு.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
— வளவன்

ஜயலத் ஜயவர்த்தனா பின்லாந்து விஜயம்

(கொழும்பு)

பின்லாந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள கற்கைச் சுற்றுலாக் குழுவின் உறுப்பினராக ஐக்கிய தேசியக் கட்சியின் நிவாரண, மனித உரிமைகள் குழுவின் தலைவர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா, ஐ.தே. கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து பின்லாந்து செல்லும் 10 உறுப்பினர்களைக் கொண்ட இக் குழுவில் ஜயலத் ஜயவர்தனா ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்.

இக்குழு ஞாயிற்றுக்கிழமை பின்லாந்துக்குப் புறப்படவுள்ளது. இந்த விஜயத்தின் போது இவர் பின்லாந்தின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும் சிரேஷ்ட நீதிச்சேவை அதிகாரிகளையும் அரசியல மைப்பு நிபுணர்களையும் பின்லாந்து புத்திஜீவிகளையும் சந்திக்கவுள்ளார். அத்துடன் பின்லாந்து இலங்கை நட்புறவுச் சங்கப் பிரதிநிதிகளையும் இவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (து)

வலி- தெற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் கலை இலக்கியப் போட்டிகள்

வலி- தெற்கு பிரதேச கலாசாரப் பேரவை இவ்வாண்டு கலை இலக்கியப் போட்டிகளை நடாத்தவுள்ளது. இதற்கமைய சிறுகதை, கவிதை, நாடக எழுத்துரு,சித்திரம், சங்கீதம், நடனம் மற்றும் நாட்டார்பாடல், இசைக் கருவிகள் மீட்டல் ஆகியன திறந்த போட்டிகளாக நடாததப் படவுள்ளன.

வலி- தெற்கு பிரதேசத்தில் நிரந்தரமாக அல்லது இடம்பெயர்ந்து வாழும் வதிவிட அத்தாட்சியுடைய பிரதேச செயலகத்தில் பணியாற்றுபவர்கள், பிரதேச கலாசாரப் பேரவை செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் இவர்களது குடும்பத்தினர் தவிர்ந்த ஏனையோர் இப் போட்டிகளில் பங்குபற்றலாம்.

இவற்றில் பங்குபற்ற விரும்புவோர் வலி- தெற்கு பிரதேச செயலகத்திலோ அல்லது தத்தமது கிராம உத்தியோகதத்ர்களிடமோ இதற்குரிய விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தியாக்கி கிராம உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலுடன், போட்டிக்கான ஆக்கத்தினையும் விண்ணப்பத்துடன் இணைத்து எதிர்வரும் டிசம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ பதிவுத தபால் மூலமாகவோ ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற)

கொலைக் குற்றச்சாட்டில் ஜெயேந்திர சுவாமி கைது

காஞ்சி வரதராஜப் பொருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சங்கராச் சாரியார் ஜகத்குரு காமகோடி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமி கள் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.



பொலிஸாரின் பாதுகாப்பில் வெளிக்கதவு இழுத்து மூடப்பட்ட சங்கர மடம்.

முன்னதாக நீதிமன்றத் தில் ஆஜர் செய்யப்பட்ட அவரை 15 நாட்கள் சிறைக்காவலில் வைக்கும்படி நீதிபதி உத்தம ராஜ உத்தரவிட்டா. இந்நிலை யில் ஜெயேந்திரரை பிணையில் விடுதலை செய்யும்படி கோரி தாக்கல்செய்த மனு மீதான விசார ணையை உயர் நீதிமன்றம் நாளைவரை ஒத்திவைத்துள்ளது.

காஞ்சிபுரம் வரதராஜப்பொரு மாள் கோவில் மேலாளராக இரு நத சங்கரராமன் கடந்த செப்ரம்பர் மாதம் 3ஆம் திகதிகோவில் வளா கத்திலேயே மர்மக் கும்பல் ஒன் றினால் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டார். பெரும் பரபரபபை ஏற்படுத்திய இக்கொலைச் சம் பவத்துக்கும் காஞ்சிபுரத்திலுள்ள சங்கர மடத்துக்கும் தொடர்பு இருப்பதாக செய்திகள் வெளிவந் தன. இந்நிலையில் இக்கொலை

சங்கரராமன் கொலைவழக்கில் சந் தேகத்தின் பேரில் கைதுசெய்யப் பட்ட ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

தொடர்பாக கொலையாளிகள் சிலர் சில தினங்களுக்கு முன் சரணடைந்தனர். மேலும் சிலர் கைது செய்யப்பட்டனர். விசார ணையில் காஞ்சி சங்கராச்சாரி யாரின் தூண்டுதலின் பேரில் தாங் கள் சங்கரராமனைக் கொலை செய்ததாக இவர்கள் கூறியதா கத தகவல் வெளியானது.

இதையடுத்து ஏ.டி.சி.பி அதி காரி மூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம ஆந்திர மாநிலம் நகபூர் நகருக்கு விரைந்த தமி ழகப் பொலிஸார் ஜெயேந்திர ரைக் கைதுசெய்து அங்கிருந்து தனி விமானம் மூலம் சென்னை க்கு நேற்று முன் தினம் அதி காலை அழைத்து வந்தனர். சங் கரராமன் கொலை வழக்கில் சங்கராச்சாரியார் முதல் குற்ற வாளியாகச் சேர்க்கப்பட்டிருக் கிறார்.

நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் காஞ்சிபுரம முதல் வகுப்பு மாஜிஸ் திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட ஜெயேந் திரரை 15 நாள் நீதி மன்றக் காவலில் வைக் கும்படி நீதிபதி உத்த மராஜ் உத்தரவிட்டார். இதையடுத்து ஜெயேந் திரர் வேலூர் மத்திய சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு நணபகல்வரை சிறைக் கண் காணிப பாளர் அறையில் உட்கார வைக்கப்பட்டிருந்த ஜெயேந்திரர் பின்னர் தனியறையொன்றில் காவலில் வைக்கப் பட்டார்.

கோவில் மேலா ளர் கொலையில் நேர டித் தொடர்பு இருப்ப தால் காஞ்சி சங்கராச சாரியார் கிரிமினல் குற்றவாளி என்றும் எனவே அவரை பிணையில் விடுதலை செய்யக் கூடாது என்றும் அரசு வழக்கறி ஞர் உயர் நீதிமன்றத்தில் கூறி யுள்ளார்.

ஜெயேந்திரர் சார்பில் தாக் கல்செய்யப்பட்ட பிணை மனுவை விசாரித்த சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி பாலசுப்பிரமணி யன் ஜெயேந்திரரை வீட்டுக் காவலில் வைப்பது குறித்து அர சின் கருத்தை அறிந்து தெரிவிக குமாறு அரசு வழக்கறிஞர் துரை சாமியிடம் கேட்டுக்கொண்டார்.

ஜெயேந்திரருக்கு எதுவித சலுகைகளும் காட்டக்கூடாது. மற்றக் குற்றவாளிகளைப் போலவே நடத்த வேண்டுமென்று அரசு வழக்கறிஞர் தெரிவித்தார். இக் கொலையுடன் சம்பந்தப்பட்ட கொலைகாரர்களுக்கு ஏற்கனவே பல கொலை, கொள்ளை வழக்கு களில் தொடர்பு.இருப்பதாகவும் அவர்கள் குண்டர் சட்டத்தில் கை தாகி சிறையில் இருந்துள்ளார் கள் என்றும் அவர் தெரிவித் தார்.

நீதிமன்றத்துக்கு வந்த ஜெயேந்திரர் பொலிஸ் வானிலிருந்து இறங்குகிறார்.

காஞ்சி சங்கர மடத்தின் 68ஆவது பீடாதிபதியாக இருந்த வரும் 'காஞ்சிப் பெரியவர்' என அழைக்கப்பட்டவருமான சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

முதல் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, கிரிமினல் குற்ற வாளியான ஜெயேந்திரருக்கு

இந்தக் கோரிக்கையை நிராகரித்த உயர் நதிமன்ற நதி பதி பாலசுப்பிரமணியன் வழக் குத் தொடர்பான ஆவணங்களைத தாக்கல் செய்யுமாறு அரசு வழக் கறிஞருக்கு உத்தரவிட்டார்.

கொலைவழக்கில் கைது செய்யப்பட்டுள்ள காஞ்சி ஜெயேந் திர சுவாமிகள் ஒரு மதகுரு என் பதாலும், வயதின் அடிப்படையி லும் அவரை வீட்டுக் காவலில் வைப்பது உள்ளிட்ட சலுகைகளை வழங்கலாம் என ஒரு தரப்பினர் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள மூத்த வழக்கறிஞர்கள் சிலர் சட் டத்தின் முன் அனைவரும் சமம

என்பதை கருத்திற்கொள்ள வேண்டு மென்று கூறியுள்ளனர்.

எனவே, இந்தியாவே உற்று நோக்கிக் கொண்டிருக்கும் இந்த

காஞ்சி சங்கர மடத்தின் 2500 ஆண்டு வரலாற்றில் இல்லாத களங்கம்

சங்கரமடத்தின் அடுத்த பீடாதிபதியாக வரவிருக்கும் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மடத்தின் நிர்வாகிகளுடன்.

வழக்கில் ஜெயேந்திரருக்கு மட் டும் சிறப்புச் சலுகைகள் அளிக் கப்பட்டால் அது முக்கிய பிர முகர்களுக்கு சட்டம் வளைந்து கொடுப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்திவிடும் என்றும் வழக் கறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள ளனர். (...) பக்கம் பார்க்க)

அரசாங்க கேள்வி அறிவித்தல்

நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும்

புழுங்கல் அரிசி

வழங்கலுக்கான கேள்வி கோரல்

1. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004 செப்ரெம்பர், ஒப்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கென எதிராக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகன்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் வழங்கப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அகாவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

இல	ப.நோ.கூ.சங்கம்	அரிசியின் அளவு (MT)			
		2004 செப்ரெம்பர்	2004 ஒக்டோபர்	2004 நவம்பர்	2004 டிசம்பர்
1	சாவகச்சேரி	95	95	95	95
2	கைதடி	35	35	35	35
3	கொடிகாமம்	68	68	68	68
4	உடுப்பிட்டி	16	16	16	16
5	கட்டைவேலி-நெல்லியடி	22	22	22	22
6	பருத்தித்துறை	57	57	57	57
7	புலோலி	13	13	13	13
8	மருதங்கேணி	40	40	40	40
9	யாழ்ப்பாணம்	156	156	156	156
10	நல்லூர்	80	80	80	80
11	அச்சுவேலி	77	77	77	77
12	நீர்வேலி	58	58	58	58
13	மானிப்பாய்	66	66	66	66
14	பண்டத்தரிப்பு	45	45	45	45
15	அளவெட்டி-மல்லாகம்	32	32	32	32
16	தெல்லிப்பளை	75	75	75	75
17	சங்கானை	91	91	91	91
18	சுன்னாகம்	98	98	98	98
19	புங்குடுதீவு-நயினாதீவு	20	20	20	20
20	வேலணை	22	22	22	22
21	ஊர்காவற்றுறை	35	35	35	35
22	காரைநகர்	28	28	28	28
23	தீவகம்	06	06	06	06
24	நெடுந்தீவு	15	15	15	15
	மொத்தம்	*1250*	*1250*	*1250*	*1250*

2. கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.
3. கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா.500 /= ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2004.11.15 ஆம் திகதி தொடக்கம் 2004.11.29ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். இவ் வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ சங்கங்களை பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.
4. மீளளக்க முடியாத கேள்வி வைப்புகளாக ரூபா 500 /= ஐ அந்தந்த மாவட்ட செயல கத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங் களையும் பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்வி கோரப்படவுள்ள அரிசி புழுங்கல் அரிசியாக இருத்தல் வேண்டும் என்பது டன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத் தல் கட்டாயமானதாகும்.
6. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக் காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 29.11.2004 பி.ப 2.00 மணிக்கு முனபாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.
7. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் " புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.
8. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர் களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.
9. ஏற்றுகொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக் கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல்வேண்டும்.
10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோ கத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.
11. கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை / மாவட்டசெயலகம்,
யாழ்ப்பாணம்.
12.11.2004

(699)

வீதி விளக்குகள் இன்மை; விஷமிகள் அங்க சேஷ்டை

(புலோலி)

மந்திகை கந்த முருகேசனார் சிலையடியிலிருந்து புற்றளைப் பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் பிரதான வீதியில் மின் விளக்குகள் பொருத்தப்படாமையினால் மாலை வேளையில் அவ்வீதியால் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாகப் பெண்கள் இவ் வீதியூடாகச் செல்வதில் மிகவும் அச்சமடைந்துள்ளனர்.

கடந்த ஒருவார காலத்தில் இரு தடவை பெண்ணொருவர் இவ்வீதியூடாக மாலை நேரத்தில் வேலையிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருக்கையில், இளைஞர் ஒருவர் பிரஸ்தாபப் பெண்மீது அங்க சேஷ்டை புரிந்ததாகத் தெரிய வருகின்றது.

வீதி விளக்குகள் இல்லாமையைச் சாதகமாகப் பயன்படுத்தி, விஷமிகள் மேற்கொள்ளும் இவ்வாறான சம்பவங்களால் அவ்வீதியூடாகப் பெண்கள் பயணிப்பதற்குப் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

எனவே இவ்வீதியில் மின் விளகுகளைப் பொருத்துவதற்கும், இவ்வீதியில் இதுபோன்ற சம்பவங்கள இனிமேலும் இடம்பெறாத வண்ணமும் அப்பகுதி கிராமசேவையாளரும் சம்பந்தப்பட்ட தரப்பினரும் விரைவில் உரிய நடவடிகைகளை எடுக்க வேண்டியது அவசியம். (ற-7)

டாக்கா உச்சி மாநாட்டில் இலங்கையும் பங்கேற்கும்

அடுத்த வருடம் ஜனவரி மாதம் டாக்காவில் நடைபெறவுள்ள 13வது பிராந்தியக் கூட்டுறவுக்கான தெற்காசிய அமைச்சின் உச்சி மாநாட்டில கலந்து கொள்வதற்கான அழைப்புக் கடிதங்கள் ஜனாதிபதியிடமும் வெளிவிவகார அமைச்சரிடமும் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

பங்களாதேஷ் பிரதமர் பேஹம் காலிதாஸ் சியாவின் விசேட தூது வராக நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகை தந்த அந்த நாட்டின் வெளி விவகார அமைச்சர் மோஷேர் ஹான் அழைப்புக் கடிதங்களை நேரடியாக இருவரிடமும் கையளித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை டாக்காவில் இம் மாநாடு நடைபெறவுள்ளது.

இதேவேளை இலங்கைக்கு வருகை தந்துள்ள பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போது சாக் அமைப்புடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் ஆராயப்படடுள்ளதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-121)

சுவிஸ் திரைப்பட விழா

(யாழ்ப்பாணம்)

சுவிற்சர்லாந்து தூதுவராலயம்,யாழ். பல்கலைக்கழக மானிடவியல்பீடம், திரிகோணகலை மையம் மற்றும் வட கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார விளையாட்டுத்துறை,இளைஞர் விவகார அமைச்சு என்பவற்றுடன்இணைந்து ஆசிய திரைப்பட மையம் நடாத்தும் 'சுவிஸ் திரைப்பட விழா' எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில இடம்பெறவுள்ளது. இதன்அங்குரார்ப்பண வைபவம் 17 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. வார நாட்களில் தினசரி பி.ப 4.30 மணிக்கும் சனிக்கிழமை மு.ப 10.30,பி.ப 2.30,பி.ப 4.30 மணிக்கும் படக்காட்சிகள் இடம்பெறும்.

அனைத்துப் படங்களும் 35 mm இல் ஆங்கில உப தலைப்புக்களுடன் காட்சிப்படுத்தப்படவுள்ளன. தினமும் கதைப்படங்களுடன் குறும்படங்களும் காட்டூன் படங்களும் காட்டப்படவுள்ளன. (ற)

யாழ்ப்பாணம் வருகை தந்த ஜேர்மனியக்குழுவினர் நேற்று யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அதன் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம். (படம்:-ஞா.ஜங்கரன்)

விவாத அரங்கு - 7

விடயம் : தனியார் கல்வி நிறுவனங்கள்
மாணவர்களின் கல்வியை
சீரழுத்துகின்றனவா
சீரழிக்கின்றனவா

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி :-

விவாத அரங்கு,
வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மீள் பார்வை

ஈழத் தமிழர் இறைமை

அத்தியாயம்-4
தொடர் -IV

மு. திருச்செல்வம்

ரொடீஷியாவில் 1965 இல் அறிவிக்கப்பட்ட அரசியலமைப்பும் அதைத் தொடர்ந்த அரசியல் சீர்திருத்தங்களும் ஒரு தலைப்பட்சமானவை. நாட்டில் உள்ள பெரும்பான்மை இனத்தவர்களான காப்பிலி இனத்தவர்களின் இசைவைப் பெறாதவை. ஒப்புதலைப் பெறாதவை. இதனால் இன்றுவரை ரொடீஷிய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியலமைப்பாக இல்லை. அரசியல் எழுச்சி மூலம் சூடானில் எழுந்ததைப் போல் ரொடீஷியாவில் அரசியலமைப்பு எழுந்தது. ரொடீஷியாவில் மக்கள் இசைவு வழங்கவில்லை. இதனால் ரொடீஷியாப் பிரச்சினை இன்று வரை தீராத பிரச்சினையே. உலக நாடுகள் கூட, இந்தப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் என ஏற்றுக்கொண்டுள்ளன. ஒரு நாட்டில் வாழும் பல இன மக்களின் , ஓரின மக்களின் இசைவைப் பெறாத அரசியலமைப்பு, ஏற்றுக்கொள்ளப்படாத அரசியலமைப்பு என்பதற்கு ரொடீஷியா சான்று.

1972 இல் இலங்கையில் எழுந்த அரசியலமைப்பு இலங்கையில் உள்ள இரு வேறு இன மக்களுள் ஒன்றான சிங்கள மக்களால் உருவாக்கப்பட்டது. சிங்கள மக்களின் இசைவுடன் உருவாக்கப்பட்டது.

மற்ற இன மக்களான தமிழ் மக்களால் இசைவு கொடுக்கப்படவில்லை, ஒப்புதல் வழங்கப்படவில்லை ஏற்றுக்கொள்ளப்படவில்லை, உருவாக்கப்பட வில்லை.

எனவே இலங்கை மக்களின் இசைவைப் (Consensus) பெற்ற அரசியலமைப்பு என இதைக் கூற முடியாது. சிங்கள மக்களின் இசைவைப் பெற்ற தமிழ் மக்களின் இசைவைப் பெறாத அரசியலமைப்பு என்றே கூற வேண்டும்.

எதிர்ப்பு

அரசியலமைப்பு யாக்க அவைக்கு வந்தார்கள். தமது கோரிக்கையை முன் வைத்தார்கள். அவை ஏற்றுக் கொள்ளப்படாததால் வெளியேறினார்கள், பகிஷ்கரித்தார்கள். இதனால் தமிழ் மக்கள் புதிய அரசியலமைப்புக்கு இசையவில்லை. இசையாமல் விட்டிருக்கலாம், எதிர்க்காமலும் விட்டார்களாம்?

இலங்கை போன்ற இரு வேறு இனங்கள் வாழும் நாட்டில் ஓரினம் தயாரித்த அரசியலமைப்புக்கு இரண்டாவது இனம் எதிர்ப்புத் தெரிவிக்காமல் விட்டாலே, அந்த அரசியலமைப்பு இரண்டாவது இனத்தால் எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் (Acquiesce) கருதலாம்.

1972 மே 22 ஆம் நாள் புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. 1972 ஜூலை 4 ஆம் நாள் முதறிஞர் செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் தேசிய அரசுப் பேரவைக்குச் சென்றார்கள். புதிய அரசியலமைப்பின் மீது பற்றுறுதியுரை கூறினார்கள். ஏற்றுக் கொண்டார்கள். கையெழுத்திட்டார்கள்.

அரசியலமைப்பு யாக்க அவையைப் புறக்கணித்தவர்கள், அதிலிருந்து வெளியேறியவர்கள், அதன் மூலம் அரசியலமைப்புத் தயாரிப்பதில் பங்கு கொள்ள மறுத்தவர்கள், தயாரித்து ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய அரசியலமைப்பை ஏற்கிறோம் என்று கையெழுத்திட்டார்கள். எனவே தமிழ் மக்கள் புதிய அரசியலமைப்பை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்டார்கள் என்று வாதிடலாம்.

உண்மை அதுவல்ல, தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் ஒப்புக்காக உறுதியுரை கூறிக் கையெழுத்திட்டார்கள். தேசிய அரசுப் பேரவையைத் தமது அரசியல் மேடையாகப் பயன்படுத்தும் நோக்குடன் கையெழுத்திட்டார்கள்.

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்திலும் இத்தகைய நடைமுறை ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒப்புக்காக உறுதியுரை கூறினார்களே ஒழியச்ள சம்பிரதாயத்துக்காகக் கையெழுத்திட்டார்களே ஒழிய, உண்மையாக அரசியலமைப்பை ஏற்றுக் கையெழுத்திடவில்லை.

ஏனெனில், அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த சில நாட்களுள், 1972 மே 25 ஆம் நாள் தமிழரசுக் கட்சியினர் யாழ்ப்பாணத்து முற்றவெளியில் கூடினார்கள், பொது இடத்தில் கூடினார்கள். மக்களின் முன் கூடினார்கள். காவல் துறையினர் வேவு பார்க்கையில் கூடினார்கள். முதறிஞர் செல்வநாயகம் தலைமையில் கூடினார்கள்.

அந்த அரசியலமைப்பின் படி ஒன்ன்ற எடுத்தார்கள். தீயிட்டார்கள். சொக்கப்பானையாகக் கொளுத்தினார்கள், சாம்பராக்கினார்கள். புதிய அரசியலமைப்பைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைச் சிங்கள மக்களுக்கும் உலகுக்கும் பகிரங்கமாக அறிவித்தார்கள்.

அத்தோடு நின்று விடவில்லை. 1972 அக்டோபர் 3 ஆம் நாள் எனது தலைவர் முதறிஞர் செல்வநாயகம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயல் ஒன்றைச் செய்தார்கள் அன்று தேசிய அரசுப் பேரவை கூடியது. முதறிஞர் செல்வநாயகம் அங்கு பேசினார்.

பேரவை முதல்வரின் அனுமதியுடன் உரையாற்றினார். தமிழில் உரையாற்றினார் அந்த உரை, தமிழ் மக்களா ல் என்றென்றும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய அறிக்கையாகும். மக்களாட்சியில் நம்பிக்கை உடையவர்கள் எப்பொழுதும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய ஒன்றாகும். அந்த உரையில் கூறப்பட்டுள்ளது என்ன?

"மாண்புமிகு சபாநாயகர் அவர்களே நான் இந்தத் தேசிய அரசுப் பேரவையில் இருந்து விலகுவதற்குத் தீர்மானித்திருக்கிறேன். அதற்கான நியாயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

"1948 ஆம் ஆண்டு தொடக்கம் இந்நாட்டில் தமிழ் மக்களுடைய வாழ்வு படிப்படியாகக் கீழ் நிலையடைந்து கொண்டே வருகிறது. 95 உறுப்பினர்களைக் கொண்ட அன்றைய பாராளுமன்றத்தில் தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் பிரதிநிதிகளாயிருந்த 8 தமிழ் உறுப்பினர்கள் இன்று இங்கு இல்லை. அவர்களுடைய இடத்தை இன்று அவர்களிலும் இரட்டித்த எண்ணிக்கையான சிங்கள உறுப்பினர்கள் எடுத்திருக்கிறார்கள். பெரும்பாலான தோட்டத் தொழிலாளருக்கு அன்று வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்த காரணத்தால் இந்த 8 தமிழ் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். பிரித்தானிய அரசாங்கம் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களுடைய பிரச்சினையில் இதை ஒரு நீதியான தீர்ப்பாகக் கருதியது.

"இலங்கை சுதந்திரம் பெற்றவுடன் சிங்கள அரசாங்கம் செய்த முதல் வேலை தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமையைப் பறித்ததேயாகும். முதலில் அவர்களுடைய பிரஜாவுரிமையைப் பிடுங்கிய குடியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றிக் குடியுரிமை உள்ளவர்களுக்கே வாக்குரிமை என்று அடுத்துச் சட்டம் இயற்றியதன் மூலம் இக்கருமம் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டது. இதனால் சோல்பரி அரசியல் திட்டத்தின் அடிப்படையே தகர்க்கப்பட்டது. இந்த நடவடிக்கையை லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் அன்று எதிர்த்தன என்று கூற விரும்புகின்றேன் இன்று அக்கட்சிகளும் வகுப்புவாதக் கொள்கைக்கு அடி பணிந்து விட்டன. "அடுத்து நடந்த அதிமுக்கிய சம்பவம் 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க அரசாங்கத்தினால் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டமையாகும். தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமை பறிக்கப்பட்டதே தனிச் சிங்களச் சட்டத்தையும் சாத்தியமாக்கியது. *(தொடரும்)*

செய்தித் துளிகள்

புனரமைப்பு

(அராலி)

அராலி வடக்கு நாகேந்திரமடத்தில் அமைந்துள்ள வைரவர் ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டு புனரமைப்பு வேலைகள் யாவும் பூர்த்தி அடைந்துள்ளன.

இதனையடுத்து கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கான ஆயத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. (ப-214)

★ ★ ★

(பொன்னாலை)

யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட கடந்த கால யுத்த நடவடிக்கைகளின் போது சேதமடைந்த பொன்னாலைச் சந்தி மக்கள் குடியிருப்பு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

சுமார் 100 வீடுகளைக் கொண்டமைந்திருந்த இக் குடியிருப்புத் திட்டம் 1978- 1980 காலப் பகுதியில் வீடமைப்பு அதிகார சபையினால் நிர்மாணித்து வழங்கப்பட்டது. (ப-49)

நிதிஉதவி

(துன்னாலை)

பாராளுமன்ற உறுபினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்ட நிதியில் கரவெட்டி பிரதேசத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான புத்தகக் கொள்வனவிற்கும் தளபாடக் கொள்வனவிற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (ப-101)

★ ★ ★

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளிற்குரிய கட்டட அமைப்புக்கள், விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு, மின் இணைப்பு, வாத்தியக் கருவிகள் கொள்வனவு போன்ற வேலைத் திட்டங்களிற்காக பிராந்திய உட்கட்டமைச்சினால் 14 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ் செயலக திட்ட பிரதிப் பணிப்பாளரினால் இது அறிவிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்தே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ப-47)

கந்தசஷ்டி

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று முதல் கந்தசஷ்டி விரத விசேடபூசையும் கந்தபுராண படனமும் நடைபெற்று வருகிறது.

புதன்கிழமை சூரன்போர் நடைபெறும் வியாழக்கிழமை முருகப் பெருமானுக்கு திருக்கல்யாணமும் நடைபெறும். (ப-214)

இலங்கைக்கு ஜப்பான் 961கோடி ஜென் கடனுதவி

(கொழும்பு)

நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் அபிவிருத்திக்கென ஜப்பான் 961 கோடி ஜென்னைக் கடனுதவியாக வழங்கவுள்ளது.

இதற்குக் குறைந்த அளவிலான 7.5 சதவீத வட்டியே விதிக்கப்படும் என்றும் 10 வருட கால சலுகைக் காலத்துடன் 40 வருட காலத்தில் இந் நிதி திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்றும் ஜப்பான் அறிவித்துள்ளது. (க-60)

கர்நாடக இசை விருந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இசைத்துறையினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிப 3.00 மணிக்கு கலாசுதி கலையரங்கில் கர்நாடக இசை விருந்து நடைபெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக இசை விரிவுரையாளர் சங்கீத வித்துவான் ஏ. கே. கருணாகரன் இந் நிகழ்வில் இசை வழங்கவுள்ளார். (ற)

நோர்வேக் குழு ரணிலுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையில் தங்கியிருக்கும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் நேற்றுக் காலை 10.00 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து உரையாடினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹானஸ் பிறட்ஸ்கர், விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நோர்வே வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் பீற்றர்சன் பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக அவர் எகிப்து பயணமானதால் இச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

இச்சந்திப்பில் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருடன் இடம்பெற்ற சந்திப்புகள் குறித்து நோர்வே பிரதிநிதிகள் எடுத்துக் கூறியுள்ளனர். (ச-121)

போட்டி

(அல்வாய்)

பாரதிதாசன் நூல் நிலையத்தினால் நடாத்தப்படும் மாணவர்களிற்கான தமிழறிவுப் போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடை பெறும். (ப-108)

கிழக்குத்தளபதிகள் கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

கிழக்கு மாகாணத்திலிருந்து விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் சிலர் கிளிநொச்சி விரைந்துள்ளனர்.

திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன்,மட்டு அம்பாறை விசேட தளபதி கேணல் பானு, மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் திருகோணமலை கட்டளைத் தளபதி சொர்ணம் ஆகியோரே கிளிநொச்சிக்கு வந்துள்ளனர்.

இவர்கள் இராணுவத்திற்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு வந்தனர். தலைவர் வே. பிரபாகரனின் அழைப்பின் பேரிலேயே இவர்கள் கிளிநொச்சிக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் டாக்டர் சுமித் தலைமையிலான குழுவினர், யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் உட்பட செயலக உயர் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம். (படம்:- ஜங்கரன்)



'அட்டகாசம்'
அஜித், பூஜா

சினிமாக்காரன் சி.எம்.ஆகலாமா?



புரட்சித் தமிழன் சத்யராஜ் நடித்து மிகப்பெரிய வெற்றியடைந்த 'அடி தடி' படத்தைத் தயாரித்த சுந்தரி பீலிம்ஸ் நிறுவனத்தின சார்பில் எம்.ஞானசுந்தரி பிரமாண்டமாய் தயாரிக்கும் அடுத்த தயாரிப்பு 'மகாநடிகன்'.

'என்னம்மா கண்ணு', 'சாலி சாப்ளின்', 'காதல் கிறுக்கன்' போன்ற வெற்றப்படங்களை இயக்கிய தமிழின் முதல்வரிசை இயக்குநர்களில் ஒருவரான ஷக்தி சிதம்பரம், இப்படத்தை இயக்குகிறார். அவருக்கு 'மகாநடிகன்' நான்காவது படம்.

சினிமாக்காரன சி.எம்.ஆகலாமா? என்பதுதான் 'மகாநடிகன்' படத்தின் ஒருவரிக் கதை. மக்கள் மனங்களில் விவாதப் பொருளாய் இருக்கும் இந்தக் கேள்வியை வைத்து ஷக்தி சிதம்பரத்தின் கற்பனையில் ஜனரஞ்சகமாக உருவான கதைதான் 'மகாநடிகன்'. இந்தப படத்தில் சத்யா என்ற சினிமா நடிகராகவே நடிக்கிறார் சத்யராஜ்.

படத்தில் சத்யா கரக்டருக்கு '.பைவ் ஸரார்' என்ற அடைமொழியும் உணடு என்பது கூடுதல் சுவாரஸ்யம். படத்தின் தொடக்கத்தில் துணைநடிகராக அறிமுகமாகும் சத்யராஜ், ஹீரோவாகி, அரசியல்வாதியாகி.... கடைசியில் ஆட்சியைப்பிடித்து முதல்வராவது போல் கதை அமைக்கப்பட்டுள்ள 'மகாநடிகன்' படத்தில் சத்யராஜ் சி.எம். ஆனபிறகு என்ன செய்கிறார் என்ற விஷயம் புதுமை மட்டுமல்ல, புரட்சிகரமானதும் கூட.

சத்யராஜ் நீண்ட இடைவெளிக்குப் பின் பலவீதமாக நடித்துக் கலக்கியிருக்கிறார். 'மகாநடிகன்' படத்தில் எம்.ஜி.ஆர், ஹீட்லர், யேசுநாதர், ரததக்கண்ணீர் எம். ஆர்.ராதா போன்ற வேடங்களில் சத்யராஜ் தோன்றும் காட்சிகளில் திரையரங்கம் கைதட்டல்களில் அதிரப்போவது நிச்சயம். சத்யராஜ்க்கு ஜோடியாக மும்தாஜ், நமீதா நடிக்கின்றனர். படத்திலும் இவர்களிருவரும் சினிமா கதாநாயகிகளாகவே நடிக்கிறார்கள்.

ஆரம்பத்தில் சத்யராஜை அலட்சியபபடுத்தும் இவர்கள் அவர் மகாநடிகனான பிறகு அவருடன ஜோடியாக நடிக்க இருவரும் போட்டி போடும் காட்சிகள் கலகலப்பானவை மட்டுமல்ல கவர்ச்சிகரமானவையும் கூட...

'மகாநடிகன்' படத்தின் சுவாரசியங்களில் ஒன்று... வார்த்தைஜாலமிக்க வசனங்கள்! மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்துமளவுக்கு வசனங்கள் இடம்பெற்றிருக்கின்றன. கைதட்டல் பெறும் வசனங்களை எழுதுவதில் கைதேர்ந்தவரான ஷக்தி சிதம்பரம் 'மகாநடிகன்' படத்தில் காட்சிக்குக் காட்சி கைதட்டல்களைப் பெறுவார் என்பது நிச்சயம்.

'தகடு.. தகடு', 'என்னம்மா கண்ணு சௌக்கியமா', 'என் கரக்டரையே புரிச்சுக்க மாட்டேங்கிறீங்களே' போன்ற சத்யராஜின் பிரபலமான வசனங்களைப் போல் 'மகாநடிகன்' படத்தில் ஷக்தி சிதம்பரம் எழுதிய பல வசனங்கள் காலத்தைக் கடந்து மக்கள் மத்தியில் பிரபலமாய் இருக்கும்.

அந்தளவுக்கு அனைத்துத் தரப்பினரும் ரசிக்கும்படி அதிரடியான வசனங்களைப் படம முழுக்க வாரி இறைத்திருக்கிறார் இயக்குநர் ஷக்தி சிதம்பரம்.

'சந்திரமுகி'
ரஜினி, பிரபு



மன்மதனை நம்பும் கவுண்டமணி

'மன்மதன்' படத்தை மிகவும் எதிர்பார்க்கிறார் கவுண்டமணி. 'மன்மதன்' நன்றாக ஓடினால் தனக்கு இன்னொரு வாய்ப்புக் கிடைக்கும் என நம்புகிறார். நன்றாக ஓடவில்லை என்றால் தனது சம்பளத்தைக குறைத்துவிட்டு கிடைக்கும் படங்களில் நடிக்கவுள்ளார். அந்த அளவுக்கு அவரை தனிமை வாட்டுகிறது.

'சந்திரமுகி'யில் ரஜினிக்கு ஜோடி நயன்

'சந்திரமுகி' படத்தில் ரஜினிகாந்தின் ஜோடியாக நடிக்க உள்ள நயன்தாரா கேரள குயில்.

கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படித்த போது டைரக்டர் சூரியன ஜெயராமுடன் 'மனசின் அக்கரை' மோகன்லாலுடன் 'விஸ்மயர் தும்பத்து' மற்றும் 'நாட்டு ராஜா' போன்ற படங்களில் நடித்த பின் சரத்குமார் ஜோடியாக 'ஐயா' படத்தின்மூலம் தமிழ் சினிமாவில் பிரவேசம் செய்தார்.

அடுத்ததாக ரஜினிக்கு ஜோடி. சென்னையில இருந்து டெலிபோனில் இந்தத் தகவலை சொன்னதும் ஆகாயத்தில் மிதந்தேன் என்று சொல்லும் நயன்தாரா உண்மையாகவே ரஜினி ரசிகையாம்.

'ஜக்குபாய்', 'சந்திரமுகி' பட செய்திகளைத் தொடர்ந்து படித்துக் கொண்டிருந்த எனக்கு இந்தவாய்ப்பு இன்ப அதிர்ச்சி

ராமாவரத்தில் உள்ளது சிவாஜி கார்டன், நண்ட வய தோப்புக்களையும், தென்னை மரங்களையும் கொண்டது. இங்கு 'ச ப்பு நடக்கிறது.

இதில் ரஜினிகாந்தின் நடை உடை பாவனைகள் 'ப ஷா பதாக படக்குழுவினர் சொல்கிறார்கள். சண்டைக்காட்சியிலும் கை, கால்களை அசைத்து ஸ்டைல் செய்வது, துள்ளல், வற்றிலும் பழைய ரஜினியாய் பிரதிபலித்து 30 வயது குறைந்தவ

கண்டிஷன் போட்ட 'சத்ர'

'...பதி' படத்தை தீபாவளிக்கு வெளியிட தீர்ப்பு தர யாக இருந்த பகுதியை முடித்துத் தர நாயகி நிகியை அழைத இதுதான் சமயம் என்று மீதிச் சம்பளத்தொகை தந்தால் கண்டிஷன் போட்டார். ஓரிரு படங்களில் நடிக்கும் முன்பே இந்த பொருமிக் கொட்டுகிறார்கள்.

கவர்ச்சிக்கு குட்பை சொன்

திருமணத்துக்குப் பின் பதினாறு வயது நக்ஷத்தில் நடி குளியளவுகூட கவர்ச்சி காட்டக்கூடாது என்பதில் திடமாயி சந்தேகிக்கும் வசனங்களைக் கூட பிறரிடம் கேட்டு அ பேசுகிறாராம்.

தொடரும் அக்ஷ

'அந்நியன்' படத்துக்குப் பிறகு 'காசி' படத்தைத் தயாரித்த அ பனிக்காக ஒரு படத்தில் நடிக்கவுள்ளார் விக்ரம்.

ஷாஜிகைலாஷ் இந்தப் படத்தை இயக்குகிறார். அந்நியனைப் போ லும பிரமாண்டமும் அக்ஷனும் கலக்கலாக இருக்குமாம் விக்ரமை நாளைக்கு அதிரடி அக்ஷன் படங்களிலேதான் பார்க்க முடியும் போ

ஒரு பாடலில் தொடை

தொடையழகி வாய்ப்பின்றி ஹிந்தியில் தலைநீட்ட இதனால் மீண்டும் தமிழுக்கே வந்து ஒரு பாட்டுக்கு நடனம் ரித்து வருகிறார். 'பதி' படத்தில் ஒரு பாட்டுக்கு சான்ஸ் கிடைக் யானதும் இதுபோல் ஒருபாடல் வாய்ப்புகள் வரிசைகட்டி

...கீயில் ... நயன்தாரா

...ளைத் தொடர்ந்து பத்திரிகைகளில் ...பு இன்ப அதிர்ச்சி என்றார் அவர். ...டன், நண்ட வயல்வெளிகளையும், ...காண்டது. இங்கு 'சந்திரமுகி' படப்பிடி

...வணைகள் 'ப...ஷா' ஸ்டைலில் இருப ...டைக்காட்சியிலும் பழைய வேகமாம். ...செய்வது, துள்ளல், கிண்டல் எல்லா ...வயது குறைந்தவராய் வருகிறாராம்.

ஆங்கில பெயர் மாற்றம்

படங்களுக்கு ஆங்கில பெயர் சூட்ட எதிர்பப்பு கிளம்பியதால் ஒரு சிலர் தங்கள் படங்களின் ஆங்கிலப் பெயரை மாற்றி தமிழ்ப பெயர் வைததார்கள். மற்றவர்களும் தமிழுககு மாற புதிய பெயர்களை யோசிக்கிறார்கள்.

இனிமேல் அனைத்துப் படங்களிலும் சுத்த தமிழ்ப் பெயர்களே இருக்குமாம். ஆங்கிலப் பெயர்களின் தலைப்பை பதிவு செய்வதும் அடியோடு நின்றுவிட்டதாம்.

'வா? புயலா?' நதியா

எம.குமரன் சன் ஆப் மகாலட்சுமிக்குப் பிறகு அமெரிக்கா சென்றவிட்ட நதியா, மீண்டும் ஒரு படத்தில் நடிக்க சென்னைக்கு வருகிறார். இரட்டை வேடங்களில் அவர் நடிக்கும் படத்துக்கு 'வா? புயலா?' என்று பெயரிட்டுள்ளார்

இந்தப் படத்தின் கதை எழுதி நல்ல தயாரிப்பாளருக்காகக் காத்திருக்கும் நதியாவின் தீவிர ரசிகர் சலபதி. இந்தப் படத்தை பாசில் இயக்க பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

சினிமாச் சிதறல்



'நெறஞ்ச மனசு'
விஜயகாந்த், சூசன்

'மன்மதன்'
சிம்பு, ஜோதிகா

அட்டகாச பேட்டி - அஜித்

தித்திக்கும் தீபாவளியில் அட்டகாசம் செய்யும் அஜித்திடம், சடசடவெனக் கேள்விகளை அடுக்கினோம். கொஞ்சம் கூட அசராமல் அதிர்வேட்டாய் வெடித்துத் தள்ளினார்.

ஏன்டா... நடிக்க வந்தோமென்று நீங்க எப்போதாவது நினைச்சதுண்டா?

பிரச்சினை எங்கேதான் இல்லை? உங்களுக்கும் கூடத்தான் இருக்கு. அதுக்காகப் பயந்து பின்வாங்கி ஓடமுடியாது. எப்பவுமே ஜெயிச்சுக்கிட்டே இருக்கணும்கிறது தான் என்னோட ஆசை. நீங்க கேட்ட மாதிரி நான் எப்பவுமே நினைச்சதில்லை... ஹீரோ ஆகணும்னு நினைச்சேன்... ஆகிட்டேன். இப்போ நம்பர் வண் ஆகிடுவேன். ஸோ, ஆகணுமனு நினைக்கிறேன்.

நம்பிக்கைதான் எப்பவுமே என் நண்பன். மத்தவங்க மாதிரி நான் பேக்ரவுண்டோட வந்து சினிமாவுல ஜெயச்சுடல.... தன்னம்பிக்கைதான் ஜெயிக்கவைச்சது... என்று வெற்றிக்கு விளக்கம் கொடுத்தவரிடம்,

தோல்வி - வெற்றி எது உங்களை அதிகம் பாதிக்கும்? என்று கேட்க,

தோல்வியோ, வெற்றியோ எதுவுமே என்னைப் பாதிக்காது... பல நேரங்களில் பாடம் கத்துக்கொடுத்திருக்கு. தோல்வி கிடைச்சுட்டா துவண்டுபோறதோ, வெற்றி கிடைச்சுட்டா அகம்பாவம் பிடிச்சு அலையிறதோ என் வேலையில்லை... தோல்வி வரும்போது, அடுத்து வராமல் இருக்க என்ன செய்யவேண்டுமென்று யோசிப்பேன. வெற்றிவரும்போது அதை எப்படி தக்கவைப்பது என்று பார்ப்பேன். ஒருத்தரே எப்பவும் ஜெயிச்சுட்டிருக்கமுடியாது. நேத்து ஜெயிச்சவங்க இப்போ தோப்பாங்க... நேத்து தோத்தவங்க, இன்னைக்கு ஜெயிப்பாங்க... இப்போ என்னோட நேரம் என்று பமராங்காய் திருப்பியடித்தார்.

...ட்ட 'சத்ர' நடிகை

...த...ரிப்பு தர... ஆசைப்பட்டது. இதற்காக மிகுதி ...கி நிகியை அழைத்தனர்.

...த்தொகை தந்தால்தான் நடிப்பேன் என்று நடிகை ...கும் முன்பே இந்த ஆட்டமா என்று படக்குழுவினர்

...பை சொன்ன 'ரன்'

...பது ...த்தில் ...டிக்க வந்துள்ள 'சிம்' நடிகை ...ர்பதி... திடமா... இருக்கிறாராம்.

...பிறரிடம் கேட்டு அர்த்தம் புரிந்துகொண்ட பிறகே

...ம் அக்ஷன்

...டத்தைத் தயாரித்த அரோமா கம்

...ர். அந்நியனைப் போலவே இதி ...மா... விக்ரமை ...க் கொஞ்ச ...பார்க்க முடியும் போல.

...ல் தொடையழகி

...யில் தலைநீட்ட அங்கும் கவனிப்பார் இல்லை. ...ாட்டுக்கு நடனம் ஆடும் வாய்ப்புகளை வலிய சேக ...கு சான்ஸ் கிடைக்கப் பின்னியுள்ளார். படம் வெளி ...கள் வரிசைகட்டி நிற்குமாம்.

ஜெய் ஆகாஷ் நடிக்கும் 'நாகா'

'வான்மதி', 'காதல்கோட்டை, 'காலமெல்லாம் காதல் வாழ்க', 'காதலே நிமமதி', 'கண்ணெதிரே தோன்றினாள்', 'கனவே கலையாதே', 'கடல் பூக்கள்', 'வெற்றிக் கொடிகட்டு' போன்ற வெற்றிப்படங்களைத் தயாரித்த சிவசக்திபாண்டியனின் ஸ்ரீசிவசக்தி மூவி மேக்கர்ஸ் (பி) லிமிடெட் பட நிறுவனம் தயாரிக்க ஜெய் ஆகாஷ் நடிக்க, அகத்தியன் இயக்கததில் உருவான 'ராமகிருஷ்ணா' விரைவில் திரைக்கு வரவுள்ளது.

இதைத் தொடர்ந்து சிவசக்தி பாண்டியன் மிகப் பிரமாண்டமான முறையில் தயாரிக்கும் படம் 'நாகா' ஸ்கோப் டி.டி.எஸ.

இப்படத்தில் ஜெய் ஆகாஷ் கதாநாயகனாக நடிக்கிறார். ஜெய்ஆகாஷ்டன் முக்கிய கதாபாத்திரங்களில் மூன்று நடிகர்கள் நடிக்கிறார்கள், அதற்கான தேர்வும், இரண்டு கதாநாயகிகள் மற்றும நடிகர், நடிகையர் தேர்வும நடைபெறறுக்கொண்டிருக்கிறது.

இப்படத்தின் படப்பிடிப்பு நவம்பர் மாதம் முதல் தொடங்கியுள்ளது. தொடர்ந்து படப்பிடிப்பு நடைபெறவுளளது. இந்தியாவில உள்ள புகழ்பெற்ற 23 கல்லூரிகளில் படத்தின் பெரும்பகுதி காட்சிகள் படமாக்கப்படவுள்ளது. அதற்காக கேரளா, கர்நாடகா, ஆந்திரா, ஜெய்பூர் போன்ற இடங்களிலுள்ள கல்லூரிகளில் படப்பிடிப்பை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

காதல்கோட்டை படத்திற்கு மூன்று தேசியவிருதுகள் கிடைத்ததுடன் 'வெற்றிக் கொடிகட்டு', 'கடல்பூக்கள்' ஆகிய படங்களுக்கு ஐந்து தேசிய விருதுகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

'சத்ரபதி'
சரத், நிகிதா

போலிவேடங்கள் களையப்பட்டு உண்மை அன்பு நிலை பெறட்டும்

காலத்துக்குக் காலம் மக்கள தமது தேவைகளைப் புதுப்பித்து தமது வாழ்வை மேம்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதை நாம் காணக் கூடியதாக உள்ளது. ஆனால் பிறரின் தேவைகள் என்ன? மற்றவர்களுக்கும் நாம்

சிறுசிறு உதவி செய்தால் அவர்களின் வாழ்வும் ஓரளவாவது மேம்பாட்டிற்கு உள்ளாகுமே என்று சிந்தித்து செயல்படுவர்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றார்கள். தம்மையும், தமது செயல்பாட்டையும் மற்றவர்கள் புகழ்ந்து பாராட்ட வேண்டும் என்ற நப்பாசையிலே பலர் வாழ்வைக் கழிக்கின்றார்கள்.

பிறர் நலன் நோக்கு என்பது பேச்சு மேடைகளை அலங்கரிக்கின்றனவே தவிர, செயற்பாடுகள் பூச்சியமே. கவின்மிகு கற்களாலும் நேர்த்தியான பொருட்களாலும் அழகுபடுத்தப்பட்ட கோவிலின் அழகைச் சிலர் பேசிக் கொண்டிருக்கும் போது, இயேசு "இவற்றையெல்லாம் பார்க்கின் றீர்கள் அல்லவா? ஒரு காலம் வரும். அப்போது கற்கள் ஒன்றின் மேல் ஒன்று இராதபடி இவை

பரமபிதா காட்டிய பாதை

யெல்லாம் இடிக்கப்படும்" என் றார். (லூக் 21:6)

அர்த்தமுள்ள இரண்டாம் வருகை

இறைமகன் இயேசுவின் இரண்டாம் வருகைக்காக நம்மை ஆயத்தம் செய்யும் பொருட்டு, ஒவ வொரு கிறிஸ்து பிறப்பு விழா வையும் நாம் நினைவு கூர்ந்து கொண்டாடுகின்றோம். ஆனால் நாம் இறைமகனின் இரண்டாம் வருகையை அலட்சியம் செய்து பிறப்பு விழாவையே கோலாகல மாகக் கொண்டாடிப் பெருமைப் படுகின்றோம். அவ்விழாவுக்கான ஆயத்தங்களையே பெருமெடுப் பில் அர்த்தம் புரியாத முறை களையெல்லாம் சேர்த்து கொண டாடுவதால், எதிர்கொள்ளப் போகும் நீதித்தர்ப்பின் வருகைக்கு அர்த்தமுள்ள வகையில் நினைவு கூராமல் விட்டுவிடுகின்றோம்.

எனவே, எமது வாழ்வில் முழுமையான மாற்றத்தை ஏற் படுத்தாமல், கிறிஸ்தவ விழுமி யங்களை எம்வாழ்வில் கடைப் பிடிக்காமல் போலியான புறக் கௌரவங்களை நிலை நாட்டிக் கொண்டு இறையரசுக்குரியவர் களாக வாழமுடியாது. நாம் மட்டும் நிறைவாக வாழ்ந்து அயலவர் களைப் புறக்கணிப்போமானால் இறைமகன் இயேசுவின் இரண் டாம் வருகையானது எமக்கு தண் டனை வருகையாகவே அமைந்து விடும்.

நாம் வாழ்ந்து கொண்டிருக் கும் தற்போதைய சூழ்நிலை யானது நிரந்தர செயற்பாட்டில் ஈடுபடமுடியாத நிலைக்கு எம்மை உட்படுத்துகின்றது. போரில்லாத போதும் வன்முறைகள், உயிரிழப புகளை எம்மால் தவிர்க்க முடி யாதுள்ளது. இயற்கையின் அனர்த்தங்கள் எம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன. அந்நிய நாடு களில் ஏற்பட்டுள்ள தெடுபிடி கள், பாதகச் செயல்கள், ஆக்கிர மிப்புகள் எல்லாம் வேதம் குறிப பிடுவது போன்று இறைமகன் இயேசுவின் மாட்சிமையுள்ள இரண்டாம் வருகைக்கு முந்திய காலத்தில் நடைபெறவேண்டிய சம்பவங்களோடு பொருந்துவன வாக அமைகின்றன. ஆனால் மனி தனின் மாண்புடைய மற்றைய மனிதரை மதிக்கின்ற நிலையும் மாற்றமடைந்து கொண்டே செல் வதை யும் அவதானிக்கக் கூடிய தாக உள்ளது. இறைவனை முன்னிலைப்படுத்தாத உலகியல் செயல்பாடுகளே பெருகிக் கொண்டு வருகின்றது. எனவே மனமாற்றம் பெற்று வாழவேண்டிய இறை வார்த்தைக்கு எம் செவிகளைக் கூர்மைப்படுத்துவோம்.

எல்லாம் இறைவன் சொந்தம

ஒவ்வொரு வினாடியும் ஒவ் வொரு நாளும் இறைவனுக்குச் சொந்தமானது. இதிலே மனிதன உரிமை பாராட்டுவது மனித அறிவுக்கு எட்டிய செயல் தான் ஒவ்வொரு மனிதனின் வாழ்வு முழுவதும் இறைவன் கையிலே தங்கியுள்ளது என்பதை மனிதன உணரும்போது அந்திச்செயல் களும், பகைமை மனப்பான்மை யும் நீங்கும் "உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" என்ற இயேசு பெருமானின் வார்த்தைகள் எம் இதயத்தைத் தொடும் போது நாம் பிறர் மட்டில்

அன்னை பீற்றர்

அக்கறையுடையவர்களாகவும், அன்புடையவர்களாகவும் செயல் படுகின்றோம்.

நாம் மட்டும் நிறைவடையும் போது , அந்த மகிழ்வு நிறைவான மகிழ்வுபோலவே காட்சிதரும். ஆனால் மற்றவர்களும் பகிர்ந்து உண்டு மகிழும்போது எம் மகிழ்வு நிறைவானதாகின்றது என்பது இயேசு பெருமான் காட்டிய பாதையாகும்.

எனவே, எமை ஆளும் தெய் வம், எமை வழிகாட்டும் தெய்வம், எமக்கு மீட்பளிக்கும் தெய்வம். இயேசு காட்டிய பாதையிலே நடந்து நற்கருணையுள்ள நற் சமுதாயத்தைக்கட்டி எழுப்ப இறை அருளை நாளும் தேடிப் பெற்றுக் கொள்வோம். □

சிறுவிளம்பரம்

வைத்தியசேவை

இருதயநோய், நீரிழிவு, நரம் புத்தளர்ச்சி, சிறுநீரகநோய் ஆண, பெண பாலியல் குறைபாடுகள், குழந்தை நோய், நோவு, முறிவு முதலிய எல்லா நோய்களுக்கும் சித்தமருந்துகள், சகல விதமான எண்ணெய்வகைகளும் பெற்றுக் கொள்ளலாம். பேரறிஞர் டாக்டர் . க.பாலசுப்பிரமணியம் அவர்களை நோயாளர் 14.11.2004 - 18.11.2004 வரை சந்திக்கலாம்.

சித்தவைத்திய ஆராய்ச்சி நிலையம், காங்கேசன் துறைவீதி, "பெரியமதவடி" சுன்னாகம்.(9005)

காணவில்லை

கடந்த தீபாவளி தினத்திற்கு முதல்நாள் யாழ்ப்பாணத்தில் ஒரு தொகைப் பணத்துடன் கூடிய ஒரு மணிப்பை தவறவிடப்பட்டுள்ளது. இதை கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்காணும் முகவரிக்கு தந்துதவுமாறு வேண்டுகிறேன். தொடர்பு - திருமதி நாதன் பொன் னரிஸ், சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (9010)

"வெளிச்சம்" வெளிவந்துள்ளது

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் கலை, இலக்கிய சமூக இதழான வெளிச்சத்தின் 88ஆவது இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் தேசியத் தலை வரின் 50ஆவது பிறந்த தினத்தை யொட்டிய கவிதையுடன், மாலிகா, கல்வயல் வே.குமாரசாமி, புதுவை இரத்தினதுறை, யாழ்.பாடியார், க.சந்திரா, வேல்.லவன் ஆகியோரின கவிதைகளும், வின்சன் புளோரன் சின் மொழிபெயர்ப்புக் கவிதையும், சிதம்பர திருச்செந்திநாதன், தாட் சாயணி, கலாநிதி சோமஸ்கந்தன், க.சட்டநாதன் ஆகியோரின் சிறு கதைகளும் இடம்பெற்றுள்ளன. அத்துடன். யதீந்திராவின் கட்டு ரையுடன் ஞானரதனின் தொடர் கட்டுரையும், மயிலங்கூடலூர் பி.நட ராசனின் நேர்காணல், பதிவுகள், குறிப்புகளுடன் இன்னும் பலவும் இடம் பெற்றிருக்கின்றன. (க)

15 பாகைவரை கையை வளைக்க சுழற்பந்து வீச்சாளர்களுக்கு அனுமதி

உலகின் பல முன்னணிப் பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சு முறையும் சந்தேகத்திற்கு இட

மானதே என நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தைய முரளிதரன் கூறியிருக்கிறார்.

தனது பந்து வீச்சை மட்டும் சந்தேகத்திற்குரியது எனக் கூற முடியாது என வலியுறுத்தும் அவர் 'தூஷ்ரா' பந்து வீச்சுமுறை குறித்து தன்னை மட்டும் குற்றஞ் சாட்டினாலும் அவுஸ்திரேலிய வீரர் கிளென் மக்ராத் உட்பட பல பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சு முறையும் தவறானதாகவே உள்ளது என்றார். அவர்கள் அங்கீக ரிக்கப்பட்ட எல்லையைவிட அதி கமாகக் கையை வளைக்கிறார் கள் என முரளி கூறியிருக்கிறார்.

மெல்போர்ன் வானொலிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். முரளி யின் தூஷ்ரா பந்து வீச்சினைச் சர்வதேச கிறிக்கெற் சபை தடை செய்திரு ந்தது. ஆனால் சகல பந்து வீச்சாளர்களும் பந்தை வீசும் போது 15 பாகை வரை கையை வளைக்க அனுமதி வழங்கப்பட வேண்டுமெனத் கோரிக்கை முன் வைக்கப்பட்டிருந்தது.

சுழற்பந்து வீச்சாளர்கள் தற் போது 15 பாகைவரை கையை வளைக்க சர்வதேச கிறிக்கெற் சபை அனுமதி வழங்கியுள்ளது. முன்பு 10 பாகை வரைக்குமே அனுமதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால் முரளி பந்து வீசும் போது 14.8 பாகைவரை அவரது கை வளைவது குறிப்பிடத்தக்கது. (து-7)

விளையாட்டு செய்திகள்

கால்பந்தாட்ட நட்சத்திரம் ரொனால்டோவுக்கு திருமணம்

பிரேஸிலைச் சேர்ந்த பிரபல



கால்பந்தாட்ட வீரர் ரொனால்டோ வுக்கு வரும் ஜனவரி மாதம் திரு மணம் நடைபெறவுள்ளது.

பிரபல மொடல் அழகியான டோனியலா சிகரெல்லா என்ற பெண்ணையே ரொனால்டோ திரு மணம் செய்யவுள்ளார். இவர்களது திருமணம் பாரிஸில் நடைபெற வுள்ளது.

28 வயதான ரொனால்டோ வுக்கு இது இரண்டாவது திரு மணமாகும். நான்கு வருடங்களுக்கு முன் மிலேன் டொமிங்ஸ் என்ற பெண்ணைத் திருமணம் செய் திருந்த ரொனால்டோவுக்கு 3 வயதில் ஒரு மகன் உண்டு. கருத்து வேறுபாடு காரணமாக அவர்கள் இருவரும் ஏற்கனவே விவாகரத் துச் செய்துவிட்டனர்.

பெண் ரசிகர்களை அதிகம் கவர்ந்த ரொனால்டோ 3 முறை சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான விருதைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (து-7)

தென்னாபிரிக்க கிறிக்கெற் அணி இந்தியாவுக்கு சுற்றுப் பயணம்

இந்தியாவுக்கு கிறிக்கெற் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு தென்னாபிரிக்க கிறிக்கெற் அணி இந்தியா சென்றுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டி களில் முதல் போட்டி 20 ஆம் திகதி கான்புரிலும், இரண்டாவது போட்டி 28 ஆம திகதி கொல்கத்தா விலும் ஆரம்பமாக விருக் கிறது. தென்னாபிரிக்க அணிக்கு தலைவராக உள்ள கிரஹம் ஸ்மித, அவுஸதிரேலிய அணியைப் போலவே தமது அணியும சிறப்பாக விளையாடும் எனக் கூறியிருக்கிறார்.

கடந்த வியாழனன்று மும்பாய் சென்றுள்ள தென்னா பிரிக்க அணித்தலைவர் கிரஹம் ஸ்மித், விமான நிலையத்தில் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில், இந்திய ஆடுகளங்கள் மற்றும் இந்தியாவின் தட்ப வெப்ப நிலை எமக்கு முற்றிலும் மாறுபட் டது; அத்துடன் சொந்த மண்ணில் இந்திய அணியை வெல்வதும் கடினமானது. ஆயினும் அவுஸ் திரேலிய அணியைப் போல் சிறப் பாக, அதிரடியாக விளையாடவே நாம் திட்டமிட்டிருக்கிறோம் என்றார்.

கிறிக்கெற் சூதாட்டப் பிரச் சினைகாரணமாக சிபஸ் போலே ஆகியோர் அணியில் இடம்பெ றாத அதேவேளை பல புதிய வீரர் கள் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களில் இருபது வயதான வீரர் ஹசீம் ஆம்லாவின் பூர்வீகம் இந்தியாவாகும். இந்திய வம்சா வளி வீரரொருவர் தென்னாபிரிக்க அணியில் இடம் பெறுவது இதுவே முதற் தடவையாகும்.

14 வரர்கள் கொண்ட தென்னா பிரிக்க அணி விபரம் வருமாறு :- கிரஹம் ஸ்மித (தலைவர்), திப்பன்னர் (20 தலைவர்) ஷேன் போலக், ஜக்கானிஸ் ஹசிம் ஆம்லா, தமி சோலிகிலி, அல் போன்சோ தோமஸ், மாட்டின் ஜோன் வெரால்ட், ஜக்ரு டால்ப், அன்ட்ரு ஹால், ரொபேர்ட் ரொயின் பீட்டர்ஸன், ஜென்டர் டி புரூயன், நிற்றஸி, ஜஸ்டின் ஆன்டங். (து-7)

அவுஸ்திரேலிய டெஸ்ட் போட்டிகளில் ஸ்டீபன் பிளெமிங் பங்கேற்பார்

அவுஸ்திரேலிய நியூசிலாந்து அணிகளுக்கிடையேயான டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து அணித் தலை வர் ஸ்டீபன் பிளெமிங் பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது அவுஸ்திரேலியா வுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண் டுள்ள நியூசிலாந்து அணி 2 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி 18 ஆம் திகதி பரிஸ்மேனில் ஆரம்பமாகி றது. இத்தொடரில் நியூசிலாந்து அணித்தலைவர் ஸ்டீபன் பிளெ மிங் பங்கேற்பது சந்தேகமாக இருந் தது. பங்களாதேஷ் சுற்றுப் பயணத் தின் போது வைரஸ் காய்ச்சலால பாதிக்கப்பட்டிருந்த பிளெமிங் தற்போது குணமடைந்துள்ளார்.

அவரைப் பரிசோதித்த மருத்து வர்கள், அவர் உடல் நலம் தேறி யுள்ளதாக அறிவித்ததை அடுத்து அவுஸ் திரேலியா சென்றுள்ள

பிளெமிங் முதல் டெஸ்ட் போட்டி யில் பங்கேற்பார் என எதிர்பார்க் கப்படுகிறது. (து-7)

அரசாங்க கேள்வி அறிவித்தல்

நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும்

தீட்டல் பச்சை அரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

1.யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004 செப்ரெம்பர், ஒப்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான தீட்டல் பச்சை அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங் களிலுள்ள பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கென எதிராக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

இல	ப.நோ.கூ.சங்கம்	அரிசியின் அளவு (MT)			
		2004 செப்ரெம்பர்	2004 ஒக்டோபர்	2004 நவம்பர்	2004 டிசம்பர்
1	சாவகச்சேரி	95	95	95	95
2	கைதடி	35	35	35	35
3	கொடிகாமம்	68	68	68	68
4	உடுப்பிட்டி	16	16	16	16
5	கட்டைவேலி - நெல்லியடி	22	22	22	22
6	பருத்தித்துறை	57	57	57	57
7	புலோலி	13	13	13	13
8	மருதங்கேணி	40	40	40	40
9	யாழ்ப்பாணம்	156	156	156	156
10	நல்லூர்	80	80	80	80
11	அச்சுவேலி	77	77	77	77
12	நீர்வேலி	58	58	58	58
13	மானிப்பாய்	66	66	66	66
14	பண்டத்தரிப்பு	45	45	45	45
15	அளவெட்டி -மல்லாகம்	32	32	32	32
16	தெல்லிப்பளை	75	75	75	75
17	சங்கானை	91	91	91	91
18	சுன்னாகம்	98	98	98	98
19	புங்குடுதீவு - நயினாதீவு	20	20	20	20
20	வேலணை	22	22	22	22
21	ஊர்காவற்றுறை	35	35	35	35
22	காரைநகர்	28	28	28	28
23	தீவகம்	06	06	06	06
24	நெடுந்தீவு	15	15	15	15
	மொத்தம்	1250	1250	1250	1250

2.கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

3.கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா.500 /= ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்வி படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2004.11.15 ஆம் திகதி தொடக்கம் 2004.11.29ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல 3.00 மணி வரைபெற்றுக் கொள்ளலாம். இவ் வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களை பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

4. மீளளக்க முடியாத கேள்வி வைப்புகளாக ரூபா 500 /= ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

5. கேள்வி கோரப்படவுள்ள அரிசி தீட்டல் பச்சை அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

6. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்ட நீளத் தபால் உறையில நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ் செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 29.11.2004 பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.4.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்வி காரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

7. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் " தீட்டல் பச்சை அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.

8. கேள்வி காரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

9. ஏற்றுகொள்ளப்பட்ட கேள்வி காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக் கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல்வேண்டும்.

10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோ கத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக ருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

11. கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விசபை / மாவட்டசெயலகம்,
யாழ்ப்பாணம்.
12.11.2004

(698)

புனர்வாழ்வு உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகர் பிரிவில் உள்ள கிளாலி, முகமாலை கிராம அலுவலகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்று வதற்கு ஏதுவாக புனர்வாழ்வு அமைச்சால் 110 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் முதற் கட்டமாக 40 லட்சம் ரூபா கையளிக்கப்பட்டுள்ளது. இதைவிட இப் பிரதேச மக்களுக்கு மேலும் பல உதவிகள் செய்ய யு.என்.டீ.பி. உலக உணவுத்திட்டம், யு.என். எச்.சி.ஆர்.போன்ற சர்வதேச நிறு வனங்கள் முன்வந்துள்ளன.

எனவே, குடாநாட்டின் ஏனை பகுதிகளில் வசிக்கும் கிளாலி, முகமாலை பகுதிகளைச் சேர்ந்த மக்களை பச்சிலைப்பள்ளி பிர தேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட உதவித்திட்டப் பணிப் பாளர் எஸ்.புத்திரசிகாமணி தெரி வித்தார். (ப-51)

அரபாத்தின் மறைவுக்கு தமிழ்க்கட்சிகள் அனுதாபம்

(கோண்டாவில்)

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் மரணத்திற்கு தமிழ்க் கட்சிகள் பல தமது அனுதாபங் களைத் தெரிவித்துள்ளன.

இவரது மறைவு விடுதலைக் காகப் போராடுபவர்களுக்கு ஓர் பேரிழப்பாகுமெனத் தமிழ்த் தேசி யக் கூட்டைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன் தனது செய்திக் குறிப் பில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் போராட்டத்தின் பரிமாணங்களையும் புறச் சூழ் நிலைகளையும் விவேகத்துடன் கையாண்டவர் தோழர் யசீர் அர பாத். இவரை இழந்து தவிக்கும் பலஸ்தீன மக்களின் துயரில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழக மும் பங்குகொள்கிறது என புளொட் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈழமக்கள் ஜன நாயகக் கட்சி மற்றும் புதிய இடது சாரிக்கட்சி ஆகியனவும் யசீர் அர பாத்தின் மறைவுக்கு தமது அனு தாபங்களை அவரது குடும்பத் திற்கும் , பலஸ்தீன மக்களுக் கும் தெரிவித்துள்ளன. (ச)

வைத்தியசாலை ஆய்வுகூடப் பணியாளர் சுகயீன லீவுப் போராட்டத்தில் குதிப்பு

(கொழும்பு)

நாடுமுழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் பணி புரியும் ஆய்வு கூடப் பணியாளர் கள் நேற்றுமுன்தினம் காலை முதல் சுகயீன லீவுப் போராட்டத் தில் ஈடுபட்டுள்ளனர்.

புதிய சேவை முறை ஒன்றை அறிமுகப்படுத்தியமை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவு களை நிறுத்தியமை ஆகியவற் றுக்கு ஆட்சேபனை தெரிவித்தும், ஏனைய பல கோரிக்கைகளை முன்வைத்தும் இந்தப் போராட்டம் இடம் பெறுவதாக அரச மருந்து ஆய்வுகூடத் தொழில்நுட்ப வியலாளர் சங்கம் தெரிவித் துள்ளது.

சுகாதார அமைச்சர், தங்க ளது கோரிக்கைகளுக்கு சாதக மான பதில் எதனையும் தரவில்லை எனவும், இதனாலேயே மீண்டும் தாம் போராட்டத்தில் குதித்துள் ளதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, இவர்களது போராட்டம் காரணமாக ஏற்பட் டுள்ள வைத்தியசாலைப் பணி களின் தாமதங்களை நிவிர்த்தி செய்யும் நடவடிக்கைகளை சுகா தார அமைச்சு மேற்கொண்டுள் ளது. (ற-10)

பாலியல் சேஷ்டை புரிந்த மூவருக்கு 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை

(துன்னாலை)

குடும்பப் பெண் ஒருவருடன் பாலியல் சேஷ்டை புரிந்த மூவ ருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் இரண்டுவருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

குடும்பப் பெண் ஒருவருடன் சேஷ்டையில் ஈடுபட்ட மூவருக் கும் ஏதிராக பருத்தித்துறைப் பொலிஸாரால் நீதிமன்றில் வழக் குத் தொடரப்பட்டது. இது தொடர் பான வழக்கு நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதவான் அரிய நாயகம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது தமது குற்றத்தை அவர்கள் ஒப்புக் கொண்டதையடுத்து, 2வருட கடூழியச் சிறைத்தண்டனையும், தலா 5 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. இவர்கள் அபரா தம் கடடத்தவறின் மேலும் ஒருவரு கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டி ஏற்படுமென நீதவான் தெரிவித்தார்.

தும்பளை லச்சுமணன் தோட்ட அகதிமுகாமைச் சேர்ந்த, நாகநாதன் யோகேஸ்வரன், கண மணி கேதீஸ்வரன், சிவலிங்கம் சிவம் ஆகிய மூவருக்குமே கடூழி யச் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. (ச-101)

வடமராட்சி கிழக்கிலிருந்து பிரபாவுக்கு வாழ்த்துச் செய்தி

(திருநெல்வேலி)

தமிழீழத் தேசியத் தலைவ ரின் 50 ஆவது பிறந்த நாளை ஒட்டி, வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களால் தமிழீழத் தேசியத் தலைவருக்கு பிறந்த நாள் வாழ்த் துச் செய்தி ஒன்று அனுப்பிவைக் கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதி யில் இருந்து 50 பேர் கொண்ட குழுவினரால் சைக்கிளில் இவ் வாழ்த்துச் செய்தி ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு, முல்லைத் தீவில் வைத்து கடற்புலிகளின் முக்கிய பிரமுகர் ஒருவரிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடற்புலிகளின் முக்கிய பிர முகர் ஊடாக தமிழீழத் தேசியத் தலைவரிடம் இவ் வாழ்த்துச் செய்தி எடுத்துச் செல்லப்பட்ட வுள்ளது.

இதேவேளை, தமிழீழத் தேசி யத் தலைவரின் பிறந்த இடமான வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் இப் பகுதி மக்களால் இவரின் பிறந்த தினம் இம் முறை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ற-43)

பலூஜாவில் மோதல் உக்கிரம் இதுவரை 600 தீவிரவாதிகள் பலி?

ஈராக்கில் பலூஜா நகரில் அமெரிக்க இராணுவத்தினருக்கும தவிரவாதிகளுக்கும் இடையில இடம்பெற்றுவரும் மோதல்கள் உக்கிரமடைந்துள்ளன.

இந்த மோதல்களில் 22 அமெரிக்க இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 170 வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை தீவிரவாதிகளின் தரப்பில் 600பேர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவத்தின் தாக்குதலுக்கான கட்டளைத் தளபதி லெப்டின் ஜெனரல ஜோன் சூட்லர் கூறியுள்ளார்.

தமது படையினர் கடந்த 4 நாட்களாக பலூஜாவில் உள்ள தீவிரவாதிகளின் இலக்கள் மீது கடும் தாக்குதல்களை நடத்தி வருவதாக குறிப்பிட்ட அவர் பலூஜாவில் 80 வீதப் பகுதியை கைப்பற்றி அதில் முகாம்களை அமைத்துள்ளதாகவும் கூறினார்.

மேலும் தமது படையினர் மேற்கொண்ட தாக்குதலிற்கு ஈடு கொடுக்க முடியாத தீவிரவாதிகள் பின்வாங்கிக் கொண்டிருப்பதாகவும் அவர்களை விரைவில் தமது படையினர் அழித்து விடுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் இம்மோதலினால் இடம் பெயர்ந்த பலூஜா மக்களுக்கு உணவு குடிநீர் மருந்து வகைகள் எதுவும் கிடைக்காதமையினால் அவர்கள் பெரும் கஷ்ரங்களை எதிர்நோக்குவதாக அங்குள்ள பொது அமைப்பின் அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார். (க-61)

ரஷியாவில் தற்போது நிலவும் கடும் குளிருகு இதமாக ஒரு நாய் ஸ்வெட்டர் அணிந்து நடைபயின்றது. அதன் கண்கொள்ளா அழகை படத்தில் ரசிக்கலாம்.

அலோர் தீவில் நில நடுக்கம் 16பேர் பலி 100பேர் படுகாயம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள தீவொன்றில் நேற்று முன்தினம் அதிகாலை அடுத்தடுத்து ஏற்பட்ட நில நடுக்கத்தில் 16பேர் கொல்லப்பட்டதோடு சுமார் 100 ற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

சுற்றுலாத் தீவான பாலி அருகே உள்ள அலோர் தீவில வெள்ளிக் கிழமை அதிகாலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவு கோலில் இது 6 எனப் பதிவானது. இதேபோன்று மூன்றுமுறை அடுத்தடுத்து அங்கு நில நடுக்கம் ஏற்பட்டது.

இதனால் தீவில் உள்ள 7 மாவட்டங்களில் இதன் பாதிப்பு இருந்தது. இதில் நூற்றுக்கணக்கான வீடுகள் மற்றும கட்டடங்கள் சேதமடைந்தாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

லேசான நிலநடுக்கம் அங்கு தற்போதும் தொடர்ந்து இருந்துவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

மத்திய ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவரும், காங்கிரஸ் தலைவருமான சோனியா பங்கேற்கிறார். சோனியாவுடன், வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங், ரயில்வே அமைச்சர் லாலு பரசாத் யாதவ், வெளியுறவு இணை அமைசசர் அகமது, மார்சிஸ்ட் தலைவர் சீதாராம் யெசசி ஆகியோரும பங்கேறகின்றனர்.

பாக்.கடற்பகுதியில் 29 இந்திய மீனவர் கைது

பாகிஸ்தான் கடற்பகுதியில் சட்டவிரோதமாக மீன் பிடித்தாக 29 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் கடலோரக் காவல் படையினர் கைது செய்துள்ளனர்.

இத்துடன் அவர்களுடைய 5 படகுகளை அவர்கள் பறிமுதல் செய்துள்ளனர். கராச்சிக்கு தென்கிழக்கே 100 கி.மீ தொலைவில உள்ள கடல் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இச் சம்பவம் நடந்ததாக் கராச்சி துறைமுக செய்தித தொடர்பாளர் தெரிவித்துள்ளார். கைது செய்யபபட்ட மீனவர்கள் 29 பேரும் சட்ட நட்வடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ற)

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் புதிய தலைவராக மகமுத் அப்பாஸ்

(ரமல்லா)

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் புதிய தலைவராக முன்னாள் பிரதமர் மகமுத் அப்பாஸ் நேற்று முன்வரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்தகவலை பலஸ்தீன அதிபர் அலுவலக வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

பலஸ்தீன விடுதலை இயக்கததின் புதிய தலைவராக அப்பாஸ் தேர்ந்தெடுக்கபட்டதை இயக்கத்தின் செயற்குழு உறுதி செய்தது.

கடந்த 1969 ஆம் ஆண்டு முதல் இந்த இயக்கத்தின் தலைவராக யஸீர் அரபாத் இருந்து வந்தார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில், பிரான்ஸ் இராணுவ மருத்துவ மனையில் யஸீர் அரபாத் சேர்க்கப்பட்டதும் இந்த இயக்கததின் தற்காலிகத் தலைவராக இவர் பொறுப்பேற்றார்.

யஸீர் அரபாத்தின் மறைவை அடுத்து. பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் புதிய தலைவராக இவர் நியமிக்கப்படடமை குறிப்பிடத்தக்கது. (ற)

அமெரிக்கா சென்றுள்ள பிரிட்டன் பிரதமர் டோனி பிளேயர் வோஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷை சந்தித்துப் பேசினார்.

கொலை.....

(23 பக்கத் தொடர்ச்சி)

சங்கரராமன் கொலை செய்யப்பட்டது தொடர்பாகப் பல்வேறு பரபரப்புத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சங்கரராமனும் அவரது தந்தையும் சங்கர மடத்தில் பணிபுரிந்து வந்தவர்கள். ஜெயேந்திரர் தொடர்பாக சங்கரராமன் அரச அதிகாரிகளுக்கு புகார் கடிதங்களை எழுதி வந்ததாகவும், இதனால் சங்கராச்சாரியாருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவே அவர் கொலை செய்யப்பட்டதாக வும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் சங்கரராமன். காஞ்சி சங்கர மடத்துடன் நெருக்கமாக இருந்தவர். பின்னர் ஜெயேந்திரருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதையடுத்து சங்கர மடத்துடனான தொடர்பை முறித்துக்கொண்டு காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவில் மேலாளர் பொறுப்பைக் கவனித்து வந்தார்.

இதன் பினனர் ஜெயேந்திரர் ஒருமுறை சீனா செல்ல முயன்றபோது மடாதிபதி ஒருவர் கடல் தாண்டிச் செல்லக்கூடாது என்பது உட்பட ஜெயேநதிரருக்கு எதிராக சில வழக்குகளைத் தொடர்ந்தார். இதனால் ஜெயேந்திரருக்கும் சங்கரராமனுக்குமிடையே கருத்து வேறுபாடு மேலும் அதிகரித்தது.

ஜெயேந்திரருக்கு எதிராகப் பல்வேறு புகார் கடிதங்களையும் சங்கரராமன் அதிகாரிகளுக்கு எழுதி வந்துள்ளார்.

இந்நிலையில் வரத ராஜப்பெருமாள் கோவில் வளாகத்திலுள்ள அலுவலகத்தில் கடந்த செப்ரெம்பர் 3ஆம் திகதி கோவில் கணக்குகளைச் சரி பார்த்துக் கொண்டிருந்த சங்கர ராமனை அங்கு வந்த 5பேர் கொண்ட குழு வெட்டிக்கொலை விட்டு தப்பியோடிவிட்டது.

இக்கொலை தொடர்பாகக கடந்த மாதம் 27ஆம் திகதி சென்னை ஜாஜ டவுண நீதிமனறத்தில் 5பேர் சரணடைந்தனர். அவர்களை காஞ்சிபுரம் துணைக கண்காணிப்பாளர் சக்திவேல் பொலிஸ் காவலில் வைத்து விசாரித்தார். அப்போது இவர்கள் 5பேரும் தங்களுக்கு தலா 3லட்சம் ரூபாவை சிலர் கொடுத்துச் சரணடையச் சொன்னதன் பேரில் நீதிமன்றத்தில் சரண டைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இதன் தொடர்பில் மேலும 9பேரைப் பொலிஸார் கைது செய்தனர். இவர்களில் சிலர் பணம் வாங்கிக்கொண்டு கொலைகளைச் செய்யும் கூலிப்படையில இருந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது. இதையடுத்து சங்கர ராமன் கொலை தொடர்பில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெயேந்திரர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

* * *

காஞ்சிப் பீடாதிபதி கைது கங்கையே பாவம் செய்தால் எங்கே மூழ்குவது? -கருணாநிதி



தவறு செய்வதை மறைப்பதற்காக மடாதிபதிகள துவராடைகளையும் உருத்திராக்க மாலைகளையும் பாதுகாப்புக் கேடயங்களாகக் கருதும் வரை தவறுகள் நடக்கத்தான் செய்யும். இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி கருத்துத் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவரிடம ஜகக்குரு ஜெயேந்திர சுவாமிகள் கைது பற்றிப் செய்தியாளர்கள் கேட்டதற்கு பதிலளித்த கருணாநிதி 'பாவம் தீர்க்க கங்கையில் மூழ்கலாம். கங்கையே பாவம் செய்தால் எங்கே மூழ்குவது என்று கேள்வியெழுப்பினார்.

ஜெயேந்திரரை கைது செய்த தற்காக காவல்துறைக்கு அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

சங்கரராமன் கொலை வழகில் குற்றவாளிகளை கைது செய்யக் கோரி காஞ்சிபுரத்தில் நட்த்தவிருந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் உண்ணாவிர போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டதாகவும் கருணாநிதி கூறினார்.

கைது பற்றி அரசியல் கட்சிகளின் அபிப்பிராயம்

கொலைவழக்கில் காஞ்சி ஜெயேந்திரர் கைதுசெய்யப்பட்டிருப்பதற்கு பல்வேறு தரப்பிலிருந்து வரவேற்பும் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஜெயேந்திரர் கைதானதை கண்டித்துள்ள பாரதிய ஜனதாக் கட்சி மாநிலச் செயலாளர் இல.கணேசன், ஜெயேந்திரர் தப்பியோடக்கூடியவர் அல்ல. அவரைக் கைது செய்து அவசர அவசரமாக தனி விமானத்தில் அழைத்து வரவேண்டிய அவசிய என்ன? என்று கேட்டுள்ளார்.

ஜெயேந்திரரின் கைதை கண்டித்து நாளையும் நாளை மறுதினமும் நாடுதழுவிய 'பந்த்' நடத்த விஷ்வ ஹிந்து பர்ஷத் அழைப்பு விடுத்துள்ளது. ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் ஜெயேந்திரர் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இந் நிலையில் ஜெயேந்திரர் கைதுக்கு ஆதரவாக மக்கள் மன்றம் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் காஞ்சிபுரத்தில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் ஜெயேந்திரர் கைதின் பின்னணி குறித்து முதலமைச்சர் விரிவான் அறிக்கை வெளியிட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழுக் கூட்டத்தில் ஜெயேந்திரர் கைதுக்கு வரவேற்புத் தெரிவிக்கப்பட்டது. எந்தப் பெரிய மனிதராக இருந்தாலும் கிரிமினல் குற்றவாளி என்ற அடிப்படையில் உரிய விசாரணை உரிய நடவடிக்கை மேற்கொள்ளபட வேண்டும் என அக் கட்சியின் செயலாளர் வரதரா ஜன் தெரிவித்துள்ளார். (து)

குழ்ச்சி முடிபு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது - குறள்

வலம்புரி

ஜெயேந்திர சுவாமிகளின் கைது இந்துமதத்தை இழிவுபடுத்தும் செயல்

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஜெயேந்திர சுவாமிகள் தமிழ்நாட்டுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிறிஸ்தவர்களுக்கு வத்திக்கானும், பாப்பரசரும் எத்துணை முதன்மையோ அதேபோன்றுதான் இந்துமக்களுக்கு காஞ்சி காமகோடி பீடமும், அதன் பீடாதிபதியும் முக்கிய இடத்தை வகிக்கின்றனர்.

இந்நிலையில் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் ஜகத்குரு ஜெயேந்திர சுவாமிகள் தமிழ்நாட்டுப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டமையானது உலகு வாழ் இந்துக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இதில் இந்துக்களின் வேதனையை மேலும் ரணமாக்குவதாக கலைஞர் கருணாநிதி போன்ற நாஸ்திகர்கள், சுவாமிகளின் கைதை வரவேற்று கருத்துத் தெரிவித்துள்ளமை இருக்கின்றது.

திராவிட முன்னேற்றக்கழகம் இந்தியாவில் நிலவிய பிராமணகுல ஆதிக்கத்தை வலுக்குறைப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். இந்தியாவைப் பொறுத்தவரை அங்கு பிராமண மேலாதிக்கம் நிலவியமை உண்மையே.

எனினும், அதற்காக பிராமணர்கள் எல்லோரையும் பிழையான கண்கொண்டு பார்ப்பது தவறாகும்.

அதேவேளை இறை நம்பிக்கை, வழிபாடு என்பவற்றை எதிர்ப்பதும் ஒரு இனத்தின் தனித்துவத்தை சீரழிப்பதற்கே வழிவகுக்கும்.

இதுவிடயத்தில் ஈ.வே.ரா பெரியார் முதல் கலைஞர் கருணாநிதி வரை அதீத பங்களிப்பு ஆற்றியுள்ளனர். கடவுள் இல்லை என்ற பிரசாரத்தில் பெரியார் முதல் கலைஞர் கருணாநிதி வரை ஈடுபட்டமைக்கான காரணங்களில் அவர்கள் பக்கத்திலிருந்து கூறப்படுபவை வேறானவை.

ஆனால் உண்மைக்காரணங்கள் பெண்கள் மீது அவர்கள் கொண்டிருந்த மோகமேயாகும்.

பகுத்தறிவாளர் எனப் போற்றப்பட்ட பெரியார் கூட எனக்கு 60 உனக்கு 18 என்று கூறியவை நவகாலத்து சினிமா நடிகர்கள்போல் நடந்து கொண்டவரே.

அந்த வரிசையின் இறுதி எல்லையில் தற்போது இருக்கக்கூடிய கலைஞர் கருணாநிதி ஒன்றோடு நின்றவரல்ல. வெளிப்படையாக மூன்றுபேரை தன் சிற்றின்பத் தேவைக்காக வைத்திருந்தவர்.

தயாளம்மாள், பட்டம்மாள், முனியம்மாள் என்ற பட்டோலை கலைஞர் கருணாநிதியின் பஞ்சணையில் முடிவிலியாக இப்போதும் தொடர்கிறது.

தனது சிற்றின்பத்தை அடக்கிக்கொள்ளமுடியாத காரணத்தினாலேயே கடவுள் இல்லையென்ற கொள்கையில் உறுதியாக இருப்பவர் கலைஞர்.

கறுத்தக் கண்ணாடியும், கறுத்தச் சால்வையும் போட்ட அவர், காவியில் சால்வை தரித்ததுகூட தனது பஞ்சணை விவகாரத்தை மூடிமறைப்பதற்காக இருக்கலாம்.

இவ்வாறு தன்னை ஒழுங்குபடுத்த முடியாத ஒருவர் ஜகத்குரு ஜெயேந்திர சுவாமிகளின் கைதை வரவேற்றிருப்பது வேடிக்கையானதாகும்.

கொலைக் குற்றச்சாட்டு என்பது நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்ல. அது பொலிஸாரின் ஊகம். அதிலும் தமிழ்நாட்டுப் பொலிஸாரின் ஊகம் ஊகங்களை அடிப்படையாகக்கொண்டு ஒரு மதபீடாதிபதியைக் கைதுசெய்வது இந்து மதத்தை வேண்டுமென்றே இழிவுசெய்யும் நடவடிக்கையாகும்.

கலைஞர் கருணாநிதியைப் பொலிஸார் கைது செய்தபோது கட்டாந்தரையில் மகளோடு குந்தி இருந்து போராடிய அவர், பொலிஸாரின் கைதுக்கு ஒத்துழைக்காமல் சண் ரீவி படப்பிடிப்பாளர் வரும் வரை - தான் கட்டிய நாலு முழம் உரிந்துபோகும் வரை குழப்படி செய்த கலைஞர், சுவாமியின் கைதை ஆதரித்திருப்பது இந்துமதத்திற்கு அவர் செய்யும் பெரும் துரோகமாகும்.

யாழ்.குடாநாட்டின்

கல்விநிலையை வீழ்ச்சியடைந்து செல்வதை தடுத்து நிறுத்த வேண்டும் என்கிறார் மாவை எம்.பி

(யாழ்ப்பாணம்)

இருபது வருடங்களாக எமது பிரதேசத்தில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக எமது மாவட்டத்தில் கல்வி நிலை மேலும் மேலும் வீழ்ச்சியடைந்து பின்னடைவை நோக்கிச் செல்வதை நாம் தடுத்து நிறுத்தி உலகின்

கல்வி வளர்ச்சியுடன் நாமும் இணைந்து செல்லக் கூடிய தாக திட்டங்களை வகுக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சோனாதிராஜா யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ். கல்வி வலயத்தின் கல்வி நிலை பற்றிய விசேட கலந்துரையாடலில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் மாவை சோனாதிராஜா தொடர்ந்து பேசும் போது,

எமது கல்வித்திட்டத்தில் மிக ஆழமாகவும் அகலமாகவும் பல்வேறு குறைபாடுகள் காணப் படுகின்றன. இவற்றினை நாம் இன்றைய பொருளாதார மற்றும் உலகமயமாக்கல் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றிக்கொள்வதன் மூலம் எமது மாணவர்களுக்கு கல்வியின் பால் இருக்கக் கூடிய ஆர்வத்தையும் அக்கறையையும் அதிகரிக்கச்செய்ய முடியும்.

இன்று எமது பிரதேசத்தில் இருக்கின்ற மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் ஒருமித்த இணக்கபபாடு காணப்படவில்லை. மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதிலும் பார்க்க தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதிலேயே மிக ஆர்வம் காட்டுகின்றார்கள்.

இத்தகைய நிலைக்கு யார் காரணம் என்பது பற்றி ஆழமாகச் சிந்திக்கவேண்டும், செயற்பட வேண்டும். எமது மாவடடத்தின் கல்விப்பிரச்சினைகளை ஒரே நாளில் தீர்த்து விடமுடியாது. இருப்பினும் இந்த மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களும் கல்விப்பணிப்பாளர்களும் இணைந்து ஆராய்ந்து பாடசாலைகள் எதிர்நோக்குகின்ற பௌதீக வளங்கள், வளப்பகிர்வுகள், ஆசிரியர் பற்றாக்குறை உள்ளிட்ட பல பிரசசினைகளை ஆராயவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எமது மாவட்டத்தில் இருந்து புலம்பெயர்ந்த நாடுகளுக்குச் சென்றுள்ள எமது மாணவர்கள் அங்குள்ள பல்கலைக்கழகங்களில் மேன்மைபெற்று தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இத்தகைய நிலைக்கு அத்திவாரம் இட்டது எமது மண் என்பது தான் உண்மை என்றார்.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிறேமச்சந்திரன், திருமதி.பத்மினி சிதம்பரநாதன், கி.சிவநேசன்,எஸ். கஜேந்திரன் ஆகியோரும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களும் கலந்து கொண்டிருந்தனர். (ப-16,19)

வெடிபொருள் அகற்றலை வெடிவீசித் தடுப்பதா?

(பொலிகண்டி)

குப்பிளான் பகுதியில் டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது குழு ஒன்று கண்ணிவெடியகற்றும் பகுதியில் சீனா வெடி ஒன்றினை கொழுத்தி எறிந்தது.

இதனால் கண்ணிவெடி அகற்றுபவர்கள் மிகவும் பதற்றம் அடைந்த நிலையில் அரைமணி நேரம் வேலையை இடை நிறுத்தினர்.

இதனையடுத்து மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு இவ்வூர் மக்கள் மிகவும் ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென கண்ணிவெடியகற்றும் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ப-106)

வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவுக் குட் பட்ட வறிய மாணவர்களுக்கு சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்ற நிதியிலிருந்து சுமார்44 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது. இவ் உபகரணங்களுக்கான நிதி மே 31 இல் நடைபெற்ற கொடிதின நிகழ்வின் மூலம் பெறப்படடது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு பாடசாலையினதும் அதிபர்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கே இவ் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் சர்வதேச சிறுவர் முதியோர் தினத்தை முன்னிட்டு பெறறோரை இழந்த 27 சிறுவர்களுக்கு தலா ஐந்நூறு ரூபா பெறுமதியான சிறுவர் கணக்கு சமுர்த்தி வங்கிகளில் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. (ப-101)

திருட்டுமின்சாரம் பெற்றோர் அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டனர்

(கோப்பாய்)

நிரந்தரமாக மின்சாரம் வழங்கப்பட்ட வீடுகளில் திருட்டுத் தனமாக மின்சாரம் பெற்றவர்கள் அண்மையில் கோப்பாய் மத்திய பகுதியில் மின்சார சபை அதிகாரிகளிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

இவ் வீடுகளில் மின்கட்டணம் குறைவாகக் காணப்பட்டமையால் ஏற்பட்ட சந்தேகத்தினால் பரிசீலனை செய்யப்பட்டபோதே இத் திருட்டுத்தனம் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் இது போன்ற சம்பவங்கள் சில பகுதியிலுள்ள பல வீடுகளில் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப.79)

காரைநகர் பிரதான வீதி சேதமடைந்த நிலையில் உள்ளது

மக்கள் விசனம்

காரைநகரின் பிரதான வீதிகள் குனறும் குழியுமாக இருப்பதனால் அப்பகுதியினூடாக பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.இது குறித்து அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பிராதன வீதிகள் குழிகளாக இருப்பதனால் மழை காலத்தில் இதில் மழைநீர் தேங்கிநின்று போக்குவரத்துக்குப் பெரும் இடையுறை விளைவிக்கிறது. இதனால் இவ்வீதியூடாக காரைநகரில் புகழ்பெற்ற இந்து ஆலயமான ஈழத்துச சிதம்பரம் மற்றும் கசூரினா உல்லாசக் கடற்கரை ஆகிய வற்றுக்குச் செல்லும் சுற்றுலாப்பயணிகளும் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். (ப-19)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக அசோக ஜெயவர்த்தன நியமனம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ் நியமனம் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளது.

ஏற்கனவே இப்பதவியிலிருந்து சிறில் ஹேரத் ஒய்வு பெற்றதையடுத்து, இப் பதவிக்கு அசோக ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

சட்டவிரோத கசிப்பு விற்பனை; ஐவருக்கு 1,15000 ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் கசிப்பு வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை போன்ற குற்றச் சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்ட 5 நபர்களுக்கு யாழ். மாவட்ட நீதி மன்றம் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

மேற்படி 5 நபர்களையும் பொலிஸார கைது செய்து யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தபோது ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்து மாறு நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை உரும்பிராய்ப் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 5 நபர்களில் மூவருக்கு தலா 15ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 5ஆயிரம் ரூபா தர்மப்பணமும் ஏனைய இருவருக்கும் 20ஆயிரம் ரூபா, 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தலா 5ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

மேற்படி 5 நபர்களுக்கும் விதிக்கப்பட்ட தர்மப் பணத்தை 'கானான்' சிறுவர் பாதுகாப்பு இல்லத்திற்கு வழங்குமாறும் நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார். (ப-5)

திசைரி தியானம்

விவேகச் சிந்தனைகள்

முழு நிலவின் பிம்பம் ஏரியில் விழுகிறது. ஆனால் மேற்பரப்பு கொந்தளிப்பாக இருப்பதால் அந்தப் பிம்பத்தை நாம் தெளிவாகக் காண முடியவில்லை. கொந்தளிப்பு அடங்கட்டும் இயற்கை அலை எழுப்பாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அமைதியாக இருங்கள். சிறிது நேரம் சென்றால் இயற்கையே உங்களை விட்டு விடும். நாம் யார் என்பது அப்போது நமக்குத் தெரியவரும்.

சுவாமி விவேகானந்தர்

3 வருடங்கள் சேவையாற்றிய

தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

அரச பாடசாலைகளில் மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக, அதாவது 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிவரை சேவையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் விரைவில் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

ஆனால், இவர்கள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் அல்லது அதிகஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் 3 வருடங்கள் தொடர்ச்சியாகச் சேவை செய்திருக்கவேண்டும்.

அத்துடன் இவர்கள் தேவையான அடிப்படைத் தகைமைகளைக்கொண்டிருக்கவேண்டும். இது தொடர்பான சுற்று நிருபத்தினை கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தரா டிமெல் சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும் விரைவில் அனுப்பிவைக்கவுள்ளார். (க-60)

நேற்று மாலை துரையப்பா விளையாட்டரங்கில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட வானவேடிக்கைக் காட்சியைப் படத்தில் காணலாம்.

படங்கள்: நோயல்

விசேட தூதுவர் எரிக்...

தேக்கமடைந்திருக்கும் இலங்கையின் சமாதான முயற்சிகளை மீளவும் ஆரம்பிக்கும் நோக்குடன் கடந்த 9 ஆம் திகதி நோர்வேயின் சமாதான விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் இலங்கை வந்திருந்தார்.

மறுநாள் 10 ஆம் திகதி நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகியோ ரும் இலங்கை வந்திருந்தனர்.

இவர்கள் சமாதான முயற்சியின் முக்கிய நகர்வுகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் கடந்த 10 ஆம் திகதி இரவு பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், ஜனாதிபதியின் செய்தியுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரை மறுநாள் 11 ஆம் திகதி கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

இச்சந்திப்புக்களை அடுத்து அமைச்சர் ஜான்பீற்றர்சன், விடார் ஹெல்கீசன் ஆகியோர் நோர்வே திரும்பிய நிலையில் எரிக்சோல் ஹெய்ம் மாத்திரம் சந்திப்புக்களில் பேசிய விடயங்கள் குறித்தும், எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்தும், சமாதான முயற்சியின் நகர்வின் போக்குக் குறித்தும் இந்தியத் தலைவர்களுக்கு விளக்குவதற்காக நேற்றுப் பிற்பகல் புதுடில்லிக்குச் சென்றுள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிக்கு இந்தியத் தலைவர்களின் ஆதரவைத் திரட்டுவதும் இவ்விஜயத்தின் நோக்கமாகும்.

இன்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங், இந்திரா காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோருடன் எரிக் சோல்ஹெய்ம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இப்பேச்சுக்களின்போது இலங்கையின் சமாதான முயற்சியின் முக்கிய விடயங்கள் குறித்தும் சமாதானத் தேக்க நிலைமையை நீக்க விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் புதிய ஆலோசனை போன்ற விடயங்களையும் சொல் ஹெய்ம் இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துக் கூறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

தீவிரவாதிகளினால் கடத்தப்பட்ட

தினேஸின் குடும்பத்தினருக்கு குவைத் நிறுவனம் நிதியுதவி

ஈராக்கில் வைத்து தீவிரவாதிகளினால் கடத்திச்செல்லப்பட்ட இலங்கையரான தினேஸ் தர்மேந்திரா இராஜரத்தினத்தின் குடும்பத்தினருக்கு அவர் பணிபுரிந்து வந்த குவைத் நிறுவனம் நிதியுதவி வழங்கத் தீர்மானித்துள்ளது.

ரம்ழான் பெருநாளை முன்னிட்டு, தினேஸின் குடும்பத்தினருக்கு இந்த நிதியுதவியை வழங்க குவைத் நிறுவனம் தீர்மானித்துள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்தார்.

குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தினூடாக் வெளிவிவகார அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள தொலைநகல் மூலம் இது உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை தினேஸ் தர்மேந்திரா இராஜரட்ணத்தை விடுவிப்பதற்கு தற்போதைய மத்திய கிழக்கு நிலைபரம் தடையாக இருப்பதாகவும் பிரதி அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (க-9)

சூட்டுக்...

அட்டகாசமாக அட்டை ஒன்றின் மூலம் எல்லாளன் படை என்ற பெயரில் இக் கொலைக்கு உரிமை கோரப்பட்டுள்ளது.

இறந்தவருக்கு அருகில் இந்த அட்டை போடப்பட்டிருந்ததாகத் தெரிவித்த பொலிஸார் இக் கொலைக்கு காரணமானவர்களைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் நடைபெறுவதாகவும் தெரிவித்தனர். (த,4,9)

யாழ்.சிறையிலிருந்து 19 கைதிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் சிறு சிறு குற்றச்செயல்களுக்காக தடுத்துவைக்கப்பட்டிருந்த 19 கைதிகள் நேற்றுக்காலை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சி பொறுப்பேற்று 10 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு ஜனாதிபதியின் விசேட பணிப்பின் பேரிலேயே இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கசிப்பு உற்பத்தி, விற்பனை மற்றும் களவு போன்ற சிறு குற்றச்செயல்களுக்காக கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து பெண்கள் உட்பட 19 பேர் யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமார தலைமையில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர். (ற)

ஆலோசனைக் கூட்டம்

(கொழும்புத்துறை)

தேசிய கலை இலக்கியப் பேரவையை விரிவுபடுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் க.தணிகாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ப-51)

முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ். மாவட்டத்தின் அலுவலகத்தினால் வாகன அனுமதிப்பத்திரத்திற்காகக் கிளி நொச்சியில் நேற்று நடாத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையில் தோற்றிய வர்களுக்கான முக்கிய கலந்துரையாடலொன்று இன்று ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (ற)

கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களுக்கான முக்கிய கூட்டம் இன்று ஞாயிறுமாலை 6 மணிக்கு கன்னாதிட்டி சயன்ஸ் கோலில் நடைபெறவிருப்பதாக தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் அறிவித்துள்ளது. (த)

விடுதலைபெற அவாவுறும்...

சார்பாக எனது இதயபூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பலஸ்தீன மக்களின் தேசிய ஒற்றுமையின் குறியீடாக யசீர் அரபாத் விளங்கினார். அவர் விடுதலைக்கான தமது மக்களின் போராட்டத்தின் சரித்திர நாயகனாகவும் திகழ்ந்தார்.

விடுதலைக்கான தமது மக்களின் போராட்டத்தின் சரித்திர நாயகனான பலஸ்தீன மக்களால் மட்டுமன்றி உலகத்தில் ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களாலும் முன் உதாரணமாக வலிமை மிக்க ஒருவராக ஆத்ம பூர்வமாக உணரப்பட்டவர்.

வரலாற்றின் ஒரு சிக்கலான நேரத்தில் நிகழ்ந்துள்ள அவரது மரணம் ஒடுக்கப்பட்டு, நீதி மறுக்கப்பட்டு அதிலிருந்து சுதந்திரமும், விடுதலையும் பெற அவாவுறும் மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாக அமைகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

மரண அறிவித்தல்



திரு. தர்மலிங்கம் பரராஜசிங்கம்

உரிமையாளர் (ஜவ்னா றேடர்ஸ் -யாழ்ப்பாணம், யாழ்ப்பாண இரும்பகம், கதிரவன் இரும்பகம் -சாவகச்சேரி)

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் பரராஜசிங்கம் அவர்கள் 10.11.2004 அன்று புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சீதேவிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், கிருஷ்ணவதியின் அன்புக் கணவரும் ஸ்ரீகாந்தன் (கனடா), ஸ்ரீரஜனி (அவுஸ்ரேலியா), ஸ்ரீகரன், ஸ்ரீமுகுந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

கௌரி (கனடா), சிவபாலன் (அவுஸ்ரேலியா), தயராஜினி, அனுஷியா ஆகியோரின் அன்பு மாமனாரும்,

காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி, சண்முகராஜா, நாகரெத்தினம் மற்றும் இராசையா, சரோஜினிதேவி (சுவிஷ்)ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்ற நாகேஷ், சரஸ்வதி, ஞானம்பாள், விஜயலஷ்மி காலஞ்சென்ற சிவநாமம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

நிருஜா, நிவேதா, பிரவீனன், பிரதாபன், ஜாகவன், ஜாகுலன், அட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 14.11.2004 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

27/7 இந்துமகளிர் ஒழுங்கை
கந்தர்மடம்,

தகவல்: மனைவி, மக்கள்
021 222 3205

(C/689)

HATTON NATIONAL BANK PLC

பிற்போடப்பட்டுள்ளது

எதிர்வரும் 20.11.2004 ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட ஏலவிற்பனை 04.12.2004 ஆம் (சனிக்கிழமை) திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

- முகாமையாளர்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்.கிளை

(C/700)

பதவி வெற்றிடம்

ஓவ்செற் பயிலுநர்கள் (இரவுக்கடமை)
பத்திரிகை விநியோகஸ்தர்கள்

(யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் உள்ள, சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் மட்டும்.)

தகுதியானவர்கள் நேரில் வரவும்.

வலம்புரி,
15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகத்தர்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.